574


DIGITIZED

Q6
N12
119890

119690

342
130

# மந்திர குறிப்பிடம்.




Imprimatur,

✠ **JOANNES.**

*Archiepiscopus Madraspatanus.*

In festo Sti. Josephi

19 Martii 1912.

# முகவுரை.

---

மகனே!

இப் புத்தகத்தில் உனக்கு மந்திரங்கள், பாவ புண்ணியங்களின் அருத்தங்கள், முதலியவைகளை விவரமாக எடுத்துக் காட்டி யிருக்கிறோம். அவைகளை நன்றாகக் கற்றுணர்ந்து தின அனுசரணைக்கு கொண்டுவரும் போது அடியில் வரும் புத்தி மதிகளையும் கவனித்து நடப்பாயாக:—

1. எல்லாப் பாவங்களுக்குந் தலையான சோம்பலிற் சிக்காமல் உனக்கு ஆண்டவர் தந்த வேலையை சுறுசுறுப்புடனே செய்து வருவாயாக.

2. கூடியவரையில் தேவ இஷ்டப் பிரசாதத்தைப் போக்கடித்துக் கொள்ளாமல் எச்சரிக்கையாக நட.

3. உன் கற்பை விசேஷ கவனத்துடன் காப்பாற்று. அதற்காகப் பரிசுத்த கன்னி மரியாயை மிக உருக்கத்துடன் வேண்டிக்கொள்.

4. பாவமில்லாத சகல காரியங்களிலும் உன் தாய் தந்தையர், பெரியோர் முதலானவர்கள் சொற்படி நடந்துகொள்.

5. உன் அந்தஸ்துக்கு தக்கபடி ஏழைகளுக்கு தருமங் கொடு.

6. உத்தரிய சபையில் சேர்ந்து பேரெழுதி வைத்து, சபைக் கட்டளைப்படி நடந்துவா.

7. ஆத்துமசோதனை செய்யாது நித்திரை போகாதே,

8. ஞாயிற்றுக் கிழமைகளிலேயும், கடன் திருநாட்களிலேயும் திவ்விய பூசை காண்பாயாக. அந்நாட்களில் சரீரப் பிரயாசையான வேலை செய்யவே வேண்



டாம். அந்நாட்களை வீணில் செலவழிக்காது ஞான புத்தகங்களை வாசித்து, பிரசங்கத்திற்கும் திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்திற்கும், தவறாமல் போவாயாக.


9. மாதந்தோறும் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து திவ்வியநற்கருணை உட்கொள்வாயாக. இன்னும் அடிக்கடி திவ்விய நன்மை உட்கொள்வது உன் ஆத்துமத்திற்கு மகாப் பிரயோசனமாகும்.

10. தபசு காலத்தில் தவறாமல் பாஸ்கு கடனைத் தீர்த்துக்கொண்டு, குறிக்கப்பட்ட நாட்களில் சுத்த போசனமும் ஒருசந்தியும் அனுசரிப்பாயாக.

ஆண்டவர் உன்னை ஆசீர்வதிப்பார்.



# மந்திர குறிப்பிடம்.



THE REGISTRAR … 13 MAY 1912 MADRAS.

## அர்ச். சிலுவை மந்திரம்.

அர்ச்சியசிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடத்திலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். எங்கள் சர்வேசுரா! பிதாவுடையவுஞ் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடை-

யவும் நாமத்தினாலே,—ஆமென் சேசு.



குறிப்பு-சிலுவையின்பேரில் மரித்த நமது இரட்சகரின் திரு மரணத்தினால் வந்த அளவில்லாத பேறுபலன்களின் பேரில் நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோமென்று காட்ட, நமது பேரில் திருச்சிலுவை வரைந்து இவ்வண்ணம் ஜெபிக்கிறோம்.

அர்த்தம்.

1. அர்ச்சியசிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே—அர்ச்சியம்-வணக்கம்; சிஷ்ட-உத்தம; சிலுவை-



நமது கர்த்தர் அறையுண்ட சிலுவைமரம்; அடையாளம்-குறிப்பு.

வணக்கத்திற்குரிய உத்தம திருச் சிலுவையின் அடையாளத்தைப் பார்த்து:

2. எங்கள் சத்துருக்களிடத்திலே நின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்—சத்துருக்கள் - உலகம், பசாசு, சரீரம்; இரட்சித்தல்-காப்பாற்றல்.

உலகம், பசாசு, சரீரம் என்னும் பகையாளிகள் கையினின்று எங்களை மீட்டுக் காப்பாற்றியருளும். அதாவது: உலக ஆசாபாசம், பசாசின் மாய தந்திரம், சரீரத்தின் இச்சை முதலிய தின்மைகளில் நாங்கள் அகப்பட்டுக் கெட்டுப் போகாதபடி எங்களைக் காப்பாற்றி இரட்சித்தருளும் என்பது.

3. எங்கள் சர்வேசுரா—சர்வம்-எல்லாம்; ஈசுரன்-கர்த்தன்; சர்வேசுரன்-எல்லாவற்றையும் உண்டாக்கிக் காப்பாற்றி நடத்திவருபவர்.

சர்வத்திற்குங் கர்த்தரான ஆண்டவரே:

4. பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே—பிதா-தகப்பன்; சுதன்-குமாரன்; இஸ்பிரீத்து, சாந்து (இலத்தீன் பதம்) இஸ்பிரீத்து-சரீரமில்லாதவை; சாந்து-பரிசுத்த; இஸ்பிரீத்துசாந்து - தேவஆவி; நாமம்-பெயர்.

பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவென்னுந் திரியேக சர்வேசுரன் பெயராலே மன்றாடுகிறோம்:

5. ஆமென் சேசு—ஆமென் (ஈபுரு பதம்) அப்படியே ஆகக்கடவது; சேசு-இரட்சகர் பெயர்.



சர்வேசுரா, உமது திருக்குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுநாதர் பெயரால் நாங்கள் கேட்கும் இந்த மன்றாட்டைத் தந்தருளுஞ் சுவாமி!

---

## ஆறு இலட்சண மந்திரம்.

1-வது சர்வேசுரன் தாமாயிருக்கிறார்.

2-வது அநாதியாயிருக்கிறார்.

3-வது சரீரமில்லாமலிருக்கிறார்.

4-வது அளவில்லாத சகல நன்மைச் சுரூபியாயிருக்கிறார்.

5-வது எங்கும் வியாபித்திருக்கிறார்.

6-வது எல்லாத்துக்கும் ஆதிகாரணமாயிருக்கிறார், - ஆமென்சேசு.

குறிப்பு-பொய்த்தேவர்களை வணங்கும் நமது இந்து தேசத்தில் மெய்யான சர்வேசுரனை இவ்வாறு லட்சணங்களால் அறிந்துகொள்ளலாம்.

அர்த்தம்.

ஆறு இலட்சண மந்திரம்— இலட்சணம்-குணம்.

1. சர்வேசுரன் தாமாயிருக்கிறார்—தாமாய்-ஒருவராய்.

சர்வேசுரன் ஒருவராலும் உண்டாக்கப்படாமல் தம்மில் தாமே சுயமாயிருப்பது அவருடைய சுபாவம்; ஆகலால் கடவுளுக்குப் புறத்திக்காரணம் இருத்தல் ஆகாது.

2. அநாதியாயிருக்கிறார்— ஆதி-துவக்கம்; அநாதி-துவக்கமில்லாமை.

சர்வேசுரனுக்குத் துவக்கமுமில்லை முடிவுமில்லை; அவர் எப்போது மிருந்தார், எப்போது மிருப்பார்.



3. சரீரமில்லாமலிருக்கிறார்— சரீரம்-உடல்.

அவர் மனிதரைப்போல் சரீரமும், அதின் அவயவங்களாகிற கண், காது, கை, கால் முதலியவைகளின்றி அரூபியாயிருக்கிறார்: அவரை நாம் நமது சரீரக் கண்ணால் காண முடியாது.

4. அளவில்லாத சகல நன்மைச் சுரூபியாயிருக்கிறார்—சுரூபி-அழகு.

மட்டற்ற வல்லமை, மட்டற்ற மகிமை, மட்டற்ற மேன்மை, அழகு, பட்சம், தயை, நீதி முதலான எல்லா சத்குணங்களையும் சம்பூரணமாகக் கொண்டிருப்பது அவருடைய சுபாவமாகும்.

5. எங்கும் வியாபித்திருக்கிறார்—வியாபித்தல் - நிறைந்திருத்தல்.

சர்வேசுரன் இல்லாத இடமில்லை; எவ்விடத்திலுமிருந்து எல்லாவற்றையும் பார்த்து அறிந்து ஆண்டு நடத்திக்கொண்டு வருகிறார்.

6. எல்லாத்துக்கும் ஆதிகாரணமாயிருக்கிறார்—காரணம்—அது காரியத்தை உண்டுபண்ணக்கூடியது, மூலம்.


ஒன்றுமில்லாதிருக்கையில் வானம், பூமி, வானத்தில் அடங்கிய சந்திர சூரிய நட்சத்திரங்கள், பூமியில் அடங்கிய சமுத்திரங்கள், மலைகள், ஆறுகள், மரங்கள் முதலிய தாவர சங்கம பொருட்கள், யானை முதல் எரும்பு வரையிலுள்ள ஜீவ ஜெந்துக்கள் ஆத்தும சரீரமுள்ள மனிதர்கள் முதலிய சகலத்தையுந் தமது திருவாக்கால் படைத்துக் காப்பாற்றிக்கொண்டு வருகிறவர் அவர்தான்.



ஆமென்சேசு.

என் இரட்சகரே! இச்சத்தியங்களெல்லாம் உண்மையென்று ஏற்றுக்கொள்ளுகிறேன்.

1



2 3 4 5 6 7



## பரமண்டல மந்திரம்.

பரமண்டலங்களிலே யிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக; உம்முடைய இராச்சியம் வருக; உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுமாப்போலே பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்று தாரும்; எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்-



கும்போல் எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும்; எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும்; தின்மையிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.--ஆமென் சேசு.

குறிப்பு-இப் பரமண்டலமந்திரம் நமது கர்த்தராகிய இயேசுநாதர் தாமே தமது திருவாக்கால் அப்போஸ்தலர்களுக்கு (அவர்கள் மூலமாக நமக்குக்) கற்றுக்கொடுத்த மகா உத்தம ஜெபமாகும். இதில் ஏழு விசேஷ மன்றாட்டுகளுண்டு.

### அர்த்தம்.

1. பரமண்டலங்களிலே யிருக்கிற எங்கள் பிதாவே—பர-உயர்ந்த, மேன்மையான; மண்டலம்-வட்டம்; பரமண்டலம்-மோட்சமண்டலம்.

உயர்ந்த மோட்ச வீட்டில் வீற்றிருக்கும் எங்கள் தகப்பனாகிய சர்வேசுரா!

உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக— அர்ச்சிக்கிறது-பூசிக்கிறது, வணங்குகிறது.

உமது திருப்பெயரை எல்லோரும் அறிந்து வணங்கி துதித்து பூசிக்கக்கடவார்களாக.

2. உம்முடைய இராச்சியம் வருக—இராச்சியம்-ஆளுகை.

இப்பூலோகத்தில் சகலருடைய இருதயத்திலும் உமது இஷ்டப்பிரசாதத்தினால் நீர் அரசாட்சி செய்வீராக.

3. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போலே பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக—சித்தம்-மனது.

உமது சித்தத்தின்படி மோட்சத்தில் சம்மனசுக்கள் அர்ச்சிய



சிஷ்டவர்கள் கீழ்ப்படிந்து நடப்பதுபோல, இப்பூலோகத்தில் வசிக்கும் மனிதர்கள் யாவரும் உமது திருக்கட்டளையின்படி நடக்கக்கடவார்களாக.

4. அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்று தாரும்—அன்றன்று - தினந்தோறும்: அப்பம்-போசனம்.

எங்கள் ஆத்தும சரீர போஷணைக்கு வேண்டிய அநுதின உணவுகளையும் இஷ்டப்பிரசாதங்களையும் இன்றைக்கு எங்களுக்குத் தந்தருளும்:

5. எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போல் எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும். —கடன் - குற்றம்; பொறுத்தல்-மன்னித்தல்.

எங்களுக்குத் தின்மை, பொல்லாப்பு செய்தவர்களை நாங்கள்

முழுமனதுடன் மன்னிப்பது போல், நாங்கள் உமக்குச்செய்த துரோகங்களை எங்களுக்கு மன்னித்தருளும்;

6. எங்களைச் சோதனையில் பிரவேசிப்பியாதேயும்—பிரவேசிக்கிறது-உட்படுகிறது.

பாவச்சோதனைகள் வரும்போது நாங்கள் மயங்கி அலைவகளில் அகப்பட்டுக் கெட்டுப்போக எங்களைக் கைவிடாதேயும்

7. தின்மையிலேநின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்—தின்மை - பொல்லாப்பு; இரட்சித்துக்கொள்ளும்-காப்பாற்றியருளும்.

எங்கள் ஆத்தும சரீரத்திற்கு நேரிடும் பொல்லாப்புகளை யெல்லாம் விலக்கி எங்களைக் காப்பாற்றியருளும்:



ஆமென்சேசு—அப்படியே ஆகக்கடவது.

இயேசுக்கிறிஸ்து நாதருடைய பேறு பலன்களைப் பார்த்து இம் மன்றாட்டுகளை எங்களுக்குத் தேவரீர் தந்தருளுவீரென்று முழுமனதோடு நம்புகிறோம்.



## பிரியதத்த மந்திரம்.

பிரியதத்தத்தினாலே பூரணமரியாயே வாழ்க; கர்த்தர் உம்முடனே; பெண்சாதிகளுக்குள்ளே,

ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே; உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப்பட்டவருமாமே. அர்ச்சியசிஷ்ட மரியாயே! சர்வேசுரனுடைய மாதாவே! பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும்,—ஆமென் சேசு.

குறிப்பு-அர்ச். காபிரியேல் சம்மனசும், அர்ச். எலிசபெத்தம்மாளும், திருச்சபையும், அர்ச். தேவமாதாவைப்பார்த்துப் புகழ்ந்த தோத்திர ஜெபம்.

அர்த்தம்.

1. பிரியதத்தத்தினாலே பூரண மரியாயே வாழ்க—பிரியம் - இஷ்டம்; தத்தம்-ஈகை; மரியாயி (எபிரேயபாஷையில்) இராக்கினி, ஆண்டவள்; வாழ்க-சுபமுண்டாக.



சர்வேசுரனுடைய அத்தியந்த நேசத்தின்மூலமாக சகல புண்ணியங்களினாலும், மேலான வரப்பிரசாதங்களினாலும் சம்பூரணமாய் நிறைந்து விளங்கும் அர்ச். மரியாயே! உமக்கே மங்களம்:

2. கர்த்தர் உம்முடனே—கர்த்தர்-ஆண்டவர்; உம்முடனே-உமது இருதயத்தில் இருக்கிறார்.

சர்வேசுரன் உமது இருதயத்தில் விசேஷ நேசத்தோடு வாசம் செய்கிறார்.

3. பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே—பெண்சாதிகளுக்குள்ளே—பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்குள்ளே; ஆசீர்வதிக்கிறது. வாழ்த்துகிறது.

பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்குள்ளே [illegible], மகிமை, முதலிய தேவ வரங்களால் அலங்கரிக்கப்பெற்ற சிறந்த பாக்கியவதி நீர் ஒருவர்தான்.

4. உம்முடைய திருவயிற்யின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப்பட்ட வருமாமே—கனி - பழம். (அர்ச். கன்னிமரியம்மாளின் திரு உதரத்திலிருந்து பிறந்தவர் நமது இரட்சகராகிய கிறிஸ்துநாதராமே)

உமது திருவயிற்றில் உதிக்கும் உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுநாதர் அளவில்லாத மகிமை பாக்கியம் நிறைந்தவராயும் சகலராலுந் துதிக்கப்படப் பாத்திரராயுமிருக்கிறார்:

5. அர்ச். மரியாயே! சர்வேசுரனுடைய மாதாவே!

பரிசுத்த மரியாயே! மனிதசுபாவமெடுத்த சுதனாகிய சர்வேசுரனின் தாயாரே!

6. பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்போதும், எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்.

பாவிகளாயிருக்கிற நாங்கள் இவ்வுலகத்தில் சீவித்திருக்கும் ஒவ்வொரு க்ஷணமும், இன்னும் விசே



ஷமாய் எங்கள் ஆத்துமம் சரீரத்தை விட்டுப் பிரியும் கடைசி நேரத்திலும் நீர் எங்களுக்கு உதவியாயிருந்து, எங்களுக்காக உமது திருக்குமாரனிடம் மனுப்பேசியருளும்:

ஆமென் சேசு.



இயேசுநாதர் பெயரால் நாங்கள் கேட்கும் இம்மன்றாட்டுக்கள் நிறைவேறுமென்று நம்புகிறோம்; ஏனெனில், எங்கள் நல்ல தாயாரே! நீர் உமது திருக்குமாரனிடம் எங்களுக்காக விரும்பிக் கேட்பதையெல்லாம் நாங்கள் தவறாது பெறுபவர்களாயிருக்கிறோம்.



## விசுவாச மந்திரம்.

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன். அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் சேசுகிறிஸ்துவையும் அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன். இவர் இஸ்பிரீத்து சாந்துவினாலே கருப்பமாய் உற்பவித்து, அர்ச். கன்னிமரியா யிடத்



திலே நின்று பிறந்து, போஞ்சு பிலாத்தின் கீழ் பாடுபட்டு, சிலுவையிலே அறையுண்டு மரித்து அடக்கப்பட்டார்; பாதாளங்களிலே யிறங்கி, மூன்றாநாள் மரித்தவர்களிடத்திலேநின்று உயிர்த்தெழுந்தருளினார்; பரமண்டலங்களிலேறிச் சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்; அவ்விடத்திலேநின்று சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்க்க வருவார். இஸ்பிரீத்து சாந்துவை அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன். பொதுவாயிருக்கிற அர்ச்சியசிஷ்ட சபையையும், அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமுதிதப் பிரயோசனத்தையும் விசுவசிக்கிறேன். பாவப் பொறுத்தலை விசுவசிக்கிறேன். மாம்ச உத்தானத்தை

விசுவசிக்கிறேன். சததமான சீவியத்
தை விசுவசிக்கிறேன். ஆமென் சேசு.

குறிப்பு-சர்வேசுரன் திரித்துவமாயிரு
ப்பது, சுதனாகிய சர்வேசுரன் மனுஷனை
இரட்சிக்க மனுஷாவதார மெடுத்தது,
மனுஷன் பரிசுத்தப் படுத்தப்படுவது
முதலான பரம இரகசியங்களை இந்த
விசுவாச மந்திரத்தில் நாம் கற்றுக்கொ
ள்ளுகிறோம். இவைகள் சத்திய சுரூபி
யான சர்வேசுரன் தாமே பன்னிரு
அப்போஸ்தலர்கள் மூலமாக நமக்குக்
கற்றுக்கொடுத்த வேத சத்தியங்க ளா
கையால் நாம் அணுவளவேனும் சந்தே
கப்படாமல் முழுமனதோடு விசுவசிக்
கக் கடவோமாக.

## அர்த்தம்.

1. பரலோகத்தையும் பூலோக
த்தையும் படைத்த சர்வத்துக்கும்
வல்ல பிதாவாகிய சர்வேசுரனை
அதியோக்கிய பத்தியாக விசுவசிக்
கிறேன்—படைக்கிறது-ஒன்றுமில்
லா திருக்கையில் யாதொரு பொ
ருளின் சேர்க்கையும் உதவியுமின்றி



யாதொன்றை சுயமாய் உண்டுபண்
ணுகிறது- சர்வம்-எல்லாம்; வல்
ல-செய்ய பலமுள்ள; பிதா-தகப்
பன்; அதி-மிகவும்; யோக்கியம்-
சங்கை; விசுவசிக்கிறது-தெரியாத
காரியத்தை மற்றொருவர் சொன்
னதால் மெய்யென்று ஏற்றுக்கொ
ள்கிறது.



பரலோகத்தில் விளங்
கும் சூரிய, சந்திர, நட்
சத்திரங்களையும், பூ
லோகத்திலுள்ள கல்,
மரம், மிருகம், மனி
தர்களையும் ஒன்று
மில்லாமையி னின்று
உண்டாக்கிய அளவில்
லாத வல்லமையுள்ள
தேவன் தேவ சுபாவ
த்தில் ஒருவரா யிருந்தாலும் ஆள் வகை
யில் மூவரா யிருக்கிறாரென்றும், முதலா
மாளுக்குப் பிதா, இரண்டா மாளுக்குச்
சுதன், மூன்றுமாளுக்கு இஸ்பிரீத்து

சாந்துவென்றும் பெயர் உண்டென்றும் மிகுந்த வணக்க ஆசாரத்தோடும் பத்தி பற்றுதலோடும் எத்துக்கொள்ளுகிறேன்.

2. அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் சேசு கிறிஸ்துவையும் அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன்—ஏக-ஒரே; சுதன்-குமாரன்; நாதர்-சகலத்துக்கும் ஆண்டவர்; சேசு-இரட்சகர்; கிறிஸ்து (கிரீக்கு பாஷையில்) தேவ ஊழியத்திற்கு அபிஷேகம் பண்ணபட்டவர்.



பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஒரே குமாரன் உண்டென்றும், அவர் திரித்துவத்தின் இரண்டாமாளென்றும், அவரே நம தாண்டவராகிய சேசு கிறிஸ்து நாதசுவாமியென்றும், அதி வணக்கத்துடன் ஒத்துக் கொள்ளுகி



றேன்.

3. இவர் இஸ்பிரித்து சாந்துவினாலே கருப்பமாய் உற்பவித்து, அர்ச். கன்னிமரியாயிடத்திலே நின்று பிறந்து, போஞ்சு பிலாத்தின் கீழ் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு மரித் தடக்கப்பட்டார்.



—இவர்-சுதனாகிய சர்வேசுரன்; கருப்பமாய்-உருவாய்; உற்பவித்து-உண்டாகி; கன்னி மரியம்மாள்-கன்னிசுத்தங்கெடாத அர்ச். மரியம்மாள்; போஞ்சு பிலாத்து-இவன் நம தாண்டவர் பாடுபட்ட காலத்தில் யூதேயா தேசத்தை யாண்டுவந்த உரோமையருடைய அதிகாரியாகும்.

இந்த இரண்டாமாளாகிய சுதன்
மனுஷாவதாரத்தில் தகப்பனி
ல்லாமல் இஸ்பிரீத்து சாந்து
வாகிய சர்வேசுரனுடைய திரு
வல்லமையினாலே பரிசுத்த கன்
னிமரியாயின் திரு உதரத்தில்
மனிதசுபாவமெடுத்துப் பிறந்து,



யூதேயா தேச அதிப
தியான போஞ்சுபிலா
த்து என்னுந் துரை
யிட்ட அநியாயமான
தீர்வையின்படியே
அவர் அடிபட்டு, நிந்
தை யவமானங்களை
நமக்காக அநுபவித்து
சிலுவைமரத்தில் இரு
ப்பாணிகளால் அறை
யப்பட்டு உயிர்விட்
டார்; அவரது திருச்சரீரத்தைக்
கல்லறையில் அடக்கஞ் செய்
தார்களென்று விசுவசிக்கிறேன்:

4. பாதாளங்களிலே யிறங்கி
மூன்றாம் நாள் மரித்தவர்களிடத்தி



லேநின்று உயிர்த்தெழுந்தருளி
னார்---பாதாளம் - பூமிக்குள்ளே
பிதாப்பிதாக்கள் வைக்கப்பட்டிரு
ந்த இடம்.



அப்போது அவரு
டைய திரு ஆத்துமம்
பூலோகம் உண்டான
நாள்முதல் தேவ இஷ்
டப் பிரசாதத்தோடு
மரித்த புண்ணியவா
ன்கள் தங்கி யிருந்த
ஸ்தலமாகிய பாதாள
த்துக்குப்போய், அவ
ர்களோடு மூன்றுநாள்
இருந்தபின்பு, மூன்
றாநாள் கல்லறையிலிருந்த திரு
ச்சரீரத்தோடு சேரவே, இயேசு
நாத சுவாமி மெய்யாகவே உயிர்
த்தெழுந்தருளினாரென்று நம்பு
கிறேன்:

5. பரமண்டலங்களிலே எறிச்
சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய

சர்வேசுரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்-- வலது பாரிசம்-வலது பக்கம், (அதாவது, மகிமைப் பிரதாப முள்ள ஸ்தலம்.)



உயிர்த்த நமது ஆண்டவர் நாற்பது நாள் தமது அப்போஸ்தலர்களுக்குத் தம்மை யடிக்கடி காண்பித்து, பின்பு மோட்சத்திற்குத் தமது வல்லமையினால் ஏறி, சர்வ வல்லபமுள்ள பிதாவாகிய சர்வேசுரனால் படைப்புண்ட சகல வஸ்துக்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டு, மனுஷருக்கியபட்டும் ஓர் உன்னத சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றார் என்று அங்கீகரிக்கிறேன்:

6. அவ்விடத்திலே நின்று சீவிய



ர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்க்க வருவார்---சீவியர்கள்-புண்ணியவாளர்கள்; மரித்தவர்கள்-பாவிகள்.



அந்த மோட்ச சிம்மாசனத்திலிருந்து நடுத்தீர்வைநாளில் இறங்கிவந்து, உலகமுடிவில் சாகிறவர்களும் அதற்குமுன் செத்தவர்களுமான யாவரையும் உயிர்ப்பித்து, சகலருக்கு முன்பாக அவனவன் செய்த பாவ புண்ணியங்களுக்காகக் கணக்குக்கேட்டு, அவனவனைத் தக்கபடி தீர்வையிடுவார் என்று நம்புகிறேன்.

7. இஸ்பிரீத்து சாந்துவை அறி போக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன்.



திரித்துவத்தின் மூன்றுமானான இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரன் பிதாச் சுதனிட மிருந்து புறப்பட்டு, எல்லாவற்றிலும் அவர்களுக்குச் சரிசமானமா யிருக்கிறாரென மிக்க விநயத்துடன் ஒத்துக் கொள்ளுகிறேன்.

8. பொதுவாயிருக்கிற அர்ச். சபையையும்--பொதுவாயிருக்கிற-சகல ஜாதி ஜனங்களுக்கும் உரிமையான.

சகல ஜாதி ஜனங்களும் இரட்சணியமடையும் பொருட்டு, இயேசுநாதரால் உண்டாக்கப்பட்ட திருச்சபை ஒன்றென்றும், அச்சபை விசுவாசத்திற்கும் நன்னடத்தைக்கும் ஒத்த போதனையைப் படிப்பிக்கிறது. அது எல்லாம் தேவவாக்காகையால், அது ஒருபோதுந் தவறிப் போகமாட்டாதென்றும் முழு மன





தோடு அங்கீகரிக்கிறேன்:

9. அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமூகித பிரயோசனத்தை விசுவசிக்கிறேன்--சமூகித-எல்லாருக்கும் பொதுவான.

சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கும் மோட்சவாசிகள், தங்கள் பாவத்தண்டனைக்காகப் பரிகாரஞ் செய்யும் உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமாக்கள், இவ்வுலகில் ஜீவித்துவரும் விசுவாசிகள் இவர்களெல்லோரும் ஒரே ஞான குடும்பத்தில் சேர்ந்தவர்களாயிருக்கிறபடியால், ஒருவர் மற்

ஒருவருக்கு உபகாரம் புரியக் கூடியவர்களா யிருக்கிறார்கள் என்று உறுதியாக ஒத்துக் கொள்ளுகிறேன்:

10. பாவப் பொறுத்தலை விசுவசிக்கிறேன்.



சகல பாவங்களையு மன்னிக்க இயேசுநாதசுவாமி தமது திருச்சபைக்கு அதிகாரங் கொடுத்திருக்கிற படியால் நமக்குப் பாவப் பொறுத்தல் உண்டென்றும் உறுதியாக விசுவசிக்கிறேன்:

11. மாம்ஸ உத்தானத்தை விசுவசிக்கிறேன்—மாம்ஸ—சரீர; உத்தானம்—உயிரோடு எழுந்திருத்தல்.





மரணித்தபின் மண்ணாய்ப்போகும் நமது சரீரம் தேவ வல்லமையினால் கடைசி நாளில் மறுபடியும் ஆத்துமத்தோடு ஐக்கியமாகி உயிர்கொண்டு எழுந்திருக்குமென்று முழுமனதோடு ஒத்துக் கொள்ளுகிறேன்.

12. சநாதனமான சீவியத்தை விசுவசிக்கிறேன்—சநாதனம்—நித்தியம்.



உயிர்த்தவர்கள் மறுபடியுஞ் சாகாமல் நித்தியமாய் மோட்சத்திலாவது, நரகத்திலாவது சீவித்திருப்பார்களென்று உறுதியாக நம்புகிறேன்.

ஆமென் சேசு.

இந்தச் சத்தியங்களையெல்லாம் சேசுநாதர் தாமே திருச்சபையின் மூலமாக எனக்குப் படிப்பித்தருளியதால் முழுமனதோடும், மிகுந்த ஆசாரவணக்கத்தோடும், பத்தி பற்றுதலோடும் விசுவசிக்கிறேன் சுவாமி! அப்படியே ஆகக்கடவது.



## பத்து கற்பனை.

சர்வேசுரன் நமக்கு அருளிச்செய்த வேத கற்பனைகள் பத்து.

முதலாவது. உனக்குக் கர்த்தாவான சர்வேசுரன் நாமே; நமக்கு முன்பாக வேறே சர்வேசுரன் உனக்கில்லாதே போவதாக.



2-வது சர்வேசுரனுடைய திருநாமத்தை வியர்த்தமாகச் சுவீகரியாதிருப்பாயாக.

3-வது. சர்வேசுரனுடைய திருநாட்களை ஆசரிக்கத்தக்கதாக நினைப்பாயாக.

4. வது. பிதாவையும் மாதாவையுஞ் சங்கித்திருப்பாயாக.

5-வது. கொலைசெய்யாதிருப்பாயாக.

6-வது. மோகம் அகம்மியா கமனம் பண்ணாதிருப்பாயாக.

7-வது. களவாணாதிருப்பாயாக.

8-வது பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

9-வது. பரதாரத்தை அபேட்சியாதிருப்பாயாக.

10-வது. பாருடைமையை அபேட்சியாதிருப்பாயாக.

இந்தப் பத்து கற்பனைகளும் இரண்டு கற்பனைகளில் அடங்கும்.

அதின் முதலாவது: எல்லாத்தையும்பார்க்க சர்வேசுரனை சிநேகிக்கிறது.

இரண்டாவது தன்னைத்தான் சிநேகிக்குமாப்போல் மற்றவர்களையுஞ் சிநேகிக்கிறது,—ஆமென்சேசு.

குறிப்பு—நாம் சர்வேசுரனுக்கு செலுத்த வேண்டிய கடமைகள் மூன்றென்றும், நமக்கும் நமது சகோதரர்களுக்கும் செய்யவேண்டிய கடமைகள் ஏழென்றும் விவரமாக சர்வேசுரன் மோயீசனுக்கெழுதிக்கொடுத்த கற்பனைகளால் காணலாம். இந்த பத்துகற்பனைகளை மனிதன் அனுசரிக்கவேண்டியது அத்தியாவசியமாகும். அனுசரியாதவனுக்கு மோட்சமில்லையாமே. இந்தப் பத்துக் கற்பனைகளை ஆதியிலிருந்து மனிதரிருதயத்தில் இயல்பாய் தேவன் பதிப்பித்திருந்தும், பிறகு எபிரேய ஜனங்களுக்கு வனாந்திரத்தில் மகா மகிமை பிரதாபத்துடன் மோயீசன் வழியாகத் தந்தருளச் சித்தமானார்.



## அர்த்தம்.

சர்வேஸ்வரன் நமக்கு அருளிச்செய்த வேதகற்பனைகள் பத்து.—



நமக்கு—நம்மில் ஒவ்வொருவருக்கும்; (நாம் என்றபதம் சகல மானிடரும் என்று அர்த்தங்கொள்ளும்.)

1. உனக்குக் கர்த்தாவான சர்வேசுரன் நாமே: நமக்கு முன்பாக வேறே சர்வேசுரன் உனக்கில்லாதே போவதாக. கர்த்தர்- அளவில்லாத அதிகாரமுள்ளவர்; நமக்கு முன்பாக—நம்மைத் தவிர; இல்லாதே போவதாக- இருக்கலாகாது.

நாம் ஒருவரே உன்னைப் படைத்து இரட்சித்துக் காப்பாற்றிக்கொண்டு வருகிற கடவுள்; ஆகையால், நம்மைத்தவிர

பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள வேறெந்த வஸ்துவையுங் கடவுளென்று நிர்மித்து வணங்காதே.

2. சர்வேசுரனுடைய திருநாமத்தை வியர்த்தமாக சுவீகரியாதிருப்பாயாக—




வியர்த்தமாக - வீணாக, (வி- இல், அவித்தம்- முகாந்தரம்; சுவீகரித்தல்— தனது சொந்தமாக்கல், (வீணாய் சொல்லல்.)

சர்வேசுரனுடைய திருப்பெயரைத் தக்க முகாந்தரமின்றி வீணில் உச்சரியாதே.

3. சர்வேசுரனுடைய திருநாட்களை ஆசரிக்கத் தக்கதாக நினைப்பாயாக—திருநாட்களை- ஞாயிற்




றுக்கிழமை கடன் திருநாட்களை; ஆ



சரித்தல்— அனுசரித்தல்.

சர்வேசுரனுடைய உத்சவ நாட்களில் அவருக்கு விசேஷ தோத்திரஞ்செய்து சுருந்த வணக்கத்தோடு அந்நாட்களைச் செலவழிக்க வேண்டுமென்பதை மறவாதே. (ஏனெனில், சாதாரணமாக ஜனங்கள் இக்கட்டளைகளை மீறி நடந்ததினால் தேவ கோபாக்கினைக்காளானார்களென்பதை நீ ஒருநாளும் மறவாதே என்று தேவன் எச்சரிக்கிறார்.)



4. பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக.-


சங்கிக்கிறது-மரியாதைசெய்கிறது.

தாய்தந்தையருக்குச் சிரவணைத்துடன் கீழ்ப்படிந்து நடப்பாயாக. (இவ்வண்ணம் நடப்பாயானால், நீ சிரஞ்சீவியாக வாழ்வாய்.)

5. கொலை செய்யாதிருப்பாயாக.



சண்டை சச்சரவு செய்யாமலும், ஒருவரையும் அநியாயமாகத் திட்டாமலும், வர்மம் சாதிக்காமலும், பகை பாராட்டாமலும், கொல்லாமலு மிருப்பாயாக.



6. மோகம், அகம்மியா கமனம் பண்ணாதிருப்பாயாக.—



அகம்மியை-கள்ள ஸ்திரீ, கமனம்-போகுதல்.

காமம், சோரம் விபசாரமாகிய கற்புக்கு விரோதமான செய்கைகள், பேச்சுகள், நினைவுகள், ஆசைகளையும் விலக்கக் கடவாயாக.



7. களவாடாதிருப்பாயாக— களவாண்கிறது - திருடுகிறது.


பிறர் பொருளை அபகரியாதே:

8. பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக.




நீ பொய் சொல்லுவதே பெருந்தவறு. ஆதலால், பொய் சொல்லி அதற்குதே

வனை சாட்சியாக கூப்பிடத் துணியாதே.



9. பரதாரத்தை யபேட்சியா திருப்பாயாக.— பரதாரம்-பிறருடையபெண்சாதி; அபேட்சித்தல்-ஆசைப்படுதல்.

பிறருடைய பெண்சாதியின்பேரில் ஆசை வையாதே.



10. பரருடைமையை யபேட்சியா திருப்பாயாக. உடைமை-பொருள்.

பிறர் பொருளுக்கு, சொத்துக்கு ஆசைப்படாதே.

இந்த பத்து கற்பனைகளும் இரண்டு கற்பனைகளில் அடங்கும்.



அதின் முதலாவது: எல்லாத்தையும் பார்க்க சர்வேசுரனை சிநேகிக்கிறது.

உயிர், உடைமை, உலகம் முதலான படைக்கசப்பட்ட வஸ்துக்களெல்லாவற்றையும் விட மேலானவரும் உத்தமருமான சர்வேசுரனை அதிகமாய்ச் சிநேகிப்பாயாக.

இரண்டாவது: தன்னைத் தான் சிநேகிக்குமாப்போல மற்றெல்லோரையுஞ் சிநேகிக்கிறது.

நீ உன்னைச் சிநேகிக்கிறதுபோல மற்றெல்லா மனிதர்களான உன் சகோதரர்களை சர்வேசுரனின் நேசத்தைப்பற்றி சிநேகிப்பாயாக.

ஆமென் சேசு.—

என் இரட்சகரான சேசுவே! நான் உமது தேவகற்பனைகளின்படி சுமுத்திரையாய் நடக்கத் திடன் தந்தருள உமது திருநாமத்தால் மன்றாடுகிறேன்; அப்படியே ஆகக்கடவது.

## திருச்சபைக் கட்டளைகள் ஆறு.

முதலாவது. ஞாயிற்றுக் கிழமைகளிலேயும் கடன் திருநாட்களிலேயும் முழு பூசை காண்கிறது.

2-வது. வருஷத்திற்கு ஒருவிசையாகிலும் நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறது.

3-வது. பாஸ்கு திருநாட்களிலே பாவசங்கீர்த்தனம்பண்ணி தேவநற்கருணை உட்கொள்ளுகிறது.

4-வது. வெள்ளிக் கிழமைகள், சதுர்காலம், தபசுகால முதலிய நாட்களில் சுத்தபோசனமும், ஒருசந்தி நாட்களில் ஒருசந்தியும் அனுசரிக்கிறது.

5-வது. விலக்கப்பட்ட காலத்திலும், குறையான பிராயத்திலும், விக்கினமுள்ள உறவின் முறைமையோடுங் கலியாணஞ்செய்யாதிருக்கிறது.



6-வது. நமது ஞான மேய்ப்பர்களுக்கு நம்மாற்கூடிய உதவி செய்கிறது,—ஆமென்சேசு.

குறிப்பு-இவை நம்முடைய ஞான சீவியத்திற்கு உதவியான சில வழிபாடுகளை நமது தாயாரான திருச்சபை, தான் சர்வேசுரனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட அதிகாரத்தின்படி, நமக்கு கட்டளையிடுங் கற்பனைகளாகும்.

### அர்த்தம்.

1. ஞாயிற்றுக் கிழமையிலேயும், கடன் திருநாட்களிலேயும் முழுபூசை காண்கிறது. ஞாயிறு-சூரியன்; ஞாயிற்றுக்கிழமை-சூரியனுக்குரிய நாள்; (ஞான சூரியனாகிய சேசுநாதர் ஞாயிற்றுக் கிழமை உத்தானமானபடியால், அத்தினம் நமக்கு ஆண்டவருடைய நாளாக நியமிக்கப்பட்டிருக்கிறது.)

ஞாயிறு வாரங்களிலும், கடன் திருநாட்களிலும் ஒவ்வொருவரும் தன்தன்

ஜீவியத்தொழிலை முற்றும் விருத்தி, தேவாலயத்திற்குச் சென்று, அங்கு குருவானவர் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்குந் திவ்விய பூசையை முழுதும் கண்டு; சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தவேண்டியது கடன். (இந்த தேசத்தில் கொண்டாடப்படும் கடன் திருநாட்களாவன: வருஷத்தில் வரும் சகல ஞாயிறுவாரங்கள், கர்த்தர் பிறந்த திருநாள், திவ்விய நற்கருணைத் திருநாள், கர்த்தர் பரலோகத்திற்கு ஆரோகணமான திருநாள், தேவமாதா மோட்சத்திற்கு எழுந்தருளின திருநாள்.)

2. வருஷத்திற்கு ஒருவிசையாகிலும் நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறது.

வருஷத்திற்கு ஒருதடவை யென்கிலும் செய்த சாவான பாவங்களை யெல்லாம் அதிகாரமுள்ள குருவானவரிடம் வெளிப்படுத்தி, பாவப்பொறுத்தல் அடையவேண்டியது கடன்.

3. பாஸ்குத் திருநாட்களிலே



பாவசங்கீர்த்தனம்பண்ணி தேவநற்கருணை உட்கொள்ளுகிறது,— பாஸ்குத் திருநாள்-கர்த்தர் உயிர்த்த திருநாள்; பாஸ்கு-கடந்துபோதல்; (பூர்வம் சர்வேசுரன் யூதஜனங்களை எஜிப்து தேசத்தினின்று மீட்டதின் ஞாபகமாக ஏற்படுத்தப்பட்ட திருநாள்.)

கர்த்தர் உயிர்த்த திருநாளுக்கு முந்தின நாட்களிலாவது, அதற்குப் பிந்தின நாட்களிலாவது அர்ச். திரித்துவத்தின் திருவிழாவுக்குள் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து, தக்க ஆயத்தத்தோடு தேவநற்கருணை உட்கொள்ள வேண்டியது கடன்.

4. வெள்ளிக்கிழமை, சதுர்காலம், தபசுகால முதலிய நாட்களில் சுத்தபோசனமும், ஒருசந்தி நாட்களில் ஒருசந்தியும் அநுசரிக்கிறது. சுத்தபோசனம்-மாமிசம் சேராத சாப்பாடு; ஒருசந்தி-ஒருவேளைச்

சாப்பாடு.

வருஷத்தில் வரும் சகல வெள்ளிக்கிழமைகளிலும், தபசுகாலத்தில் வரும் புதன், வெள்ளி சனிக்கிழமைகளிலும், வருஷத்தில் நான்குமுறை வரும் சதுர்காலத்தின் புதன், வெள்ளி சனிக்கிழமைகளிலும் மாமிச மருந்தாமல் சுத்தபோசனம் அநுசரிக்கவேண்டியது கடன். இது பொதுக்கட்டளையாகும். அந்தந்த விசாரணை குருவானவரிடம் சுத்தபோசனநாட்களில் மாமிச மருந்த உத்தரவு உண்டானால் கேட்டறிந்து அதின்படி நடந்துகொள்ளவும்.

21 பிராயத்திற்கு மேற்பட்டவர்களும், 60 பிராயத்திற்கு உட்பட்டவர்களும் எல்லோரும் கடன் ஒருசந்தி நாட்களில் ஒருசந்தியாயிருக்க வேண்டும். இக்கட்டளையை அநுசரிக்க இயலாதவர்கள் தங்கள் விசாரணைக் குருவானவருடைய உத்தரவு பெற்றுக்கொண்டாலொழிய அந்நாட்களில் ஒரு சந்தி அநுசரிக்காமற் போனால் அது பாவமாகும்.

5. விலக்கப்பட்ட காலத்திலுங்



குறையான பிராயத்திலும் விக்கினமுள்ள உறவின் முறைமையோடுங் கலியாணஞ் செய்யாதிருக்கிறது.

கலியாண விஷயத்தில் திருச்சபை விலக்கும் ஆகமன தபசுகாலங்களிலும். பெண்ணுக்குப் பன்னிரண்டு, பிள்ளைக்குப் பதினாறு பிராயமாகாமுன்னும், திருச்சபை ஸ்தாபித்த விக்கினமுறைமைகளிலும் கலியாணஞ் செய்யாமலிருக்கவேண்டியது கடன். இக்கட்டளையை மீறி இதற்கென்று விசேஷ உத்தரவு பெறாமல் செய்யப்படும் கலியாணங்கள் கலியாணமாகாமல் விபசாரக் குற்றமாகும்.

6. நமது ஞான மேய்ப்பர்களுக்கு நம்மாற் கூடிய உதவிசெய்கிறது.

பத்திலொன்று முந்தின பலனில் கோவிலுக்குக் காணிக்கையாக கொடுக்கிறது என்னுந் தேவகற்பனைப் பிரகாரம் கிறிஸ்துவர்கள் தங்களால் கூடியமட்டுக் தங்கள் ஞானாசாரியர்களுக்கு உதவிசெய்ய வேண்டியது கடன்தான்.

## தலையான பாவங்கள் ஏழு.



முதலாவது: ஆங்காரம். 2-வது கோபம். 3-வது மோகம். 4-வது உலோபித்தனம். 5-வது போசனப்பிரியம். 6-வது காய்மகாரம். 7-வது சோம்பல்.

குறிப்பு-இவைகளில் ஒவ்வொன்றும் அநேக பாவங்களுக்கு ஊற்றும் காரணமுமாயிருப்பதினால், இவ்வேழு பாவங்களும் தலையான பாவங்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன.

அர்த்தம்.

1. ஆங்காரம்—கர்வம்-தற்பெருமை.



தன்னைத் தான் பெரிதாயெண்ணி மற்றவர்களை நிந்திக்கிறது.

2. கோபம்—சினம்-வெறுப்பு.

நமக்குப் பொருந்தாதவைகளை நம்மை விட்டு அகற்றும்படி கிரமந் தவறி சண்டை சச்சரவு செய்கிறது.

3. மோகம்—காமம்-சரீர இச்சை.

கற்புக்கு விரோதமான இன்பசுகங்களை அக்கிரமமாக ஆசிக்கிறது.

4. உலோபித்தனம்—கயாமை-பொருளாசை.

மட்டுக்கடங்கா ஆசை ஆவலோடு பொருளைச் சம்பாதித்தபின்பு அதைத் தான தருமத்தால் ஏழைகளுக்கு உதவிபுரியாமலிருப்பது.

5 போசனப் பிரியம்—பெருந்தீனி-பேருண்டி.

அன்ன பானாதிகளை மட்டுமீதியின்றி உபயோகிக்கிறது.

6. காய்மகாரம்—எரிச்சல், பொறாமை.

புறத்தியாருக்கு வந்த நன்மைகளைப் பற்றி கஸ்தியும், தீமைகளைப் பற்றி சந்தோஷமுங் கொள்ளுகிறது.

7. சோம்பல்—மந்த குணம்—கவலையற்றதனம்.

நமது அந்தஸ்தின் கடமைகளையும் ஆத்தும இரட்சண்யத்தையும் கவனியாததாம், அல்லது அவைகளைச் செய்தாலும் அசமந்தமாய் நிறைவேற்றுவதும், வீண் காலக்ஷேபம் செய்வதுமாம்.

## தலையான பாவங்களுக்கு விரோதமான புண்ணியங்கள் ஏழு

முதலாவது: ஆங்காரத்திற்கு விரோதம், தாழ்ச்சி. 2-வது. கோபத்திற்கு விரோதம், பொறுமை. 3-வது மோகத்திற்கு விரோதம், விரதத்துவம். 4-வது உலோபித்தனத்திற்கு விரோதம், உதாரத்வம். 5-வது போசனப் பிரியத்திற்கு விரோதம், மட்டசனம். 6-வது காய்மகாரத்திற்கு



விரோதம், சிநேகம். 7-வது. சோம்பலுக்கு விரோதம், சுறுசுறுப்பு.



## பாவசங்கீர்த்தன மந்திரம்.

குறிப்பு—நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யும்படியான வரம் பெற்றுக்கொள்ள தேவதாயார், அர்ச்சியசிஷ்டவர்கள் மன்றாட்டைக் கேட்கும் ஜெபம். பாவசங்கீர்த்தனம் செய்யு முன்னும், பூசையாரம் பத்திலும் சொல்லிக்கொள்ளத் தக்கது.

சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரனுடனேயும், எப்பொழுதுங் கன்

னியாயிருக்கிற முத்திப்பேறு பெற்ற மரியாயுடனேயும், பிரதான சம்மனசா யிருக்கிற முத்தனான மிக்கே லுடனேயும், ஸ்நாபகனா யிருக்கிற முத்தனான அருளப்பருடனேயும், அப்போஸ்தலராயிருக்கிற அர்ச்சியசிஷ்ட இராயப்பருடனேயும், சின்னப்பருடனேயும், சகல அர்ச்சியசிஷ்டவர்க ளுடனேயும்; எனக்குக் குருவாயிருக்கிற உம்முடனேயும் பாவ சங்கீர்த்தனம் பண்ணிக் கொள்ளுகிறேன்: அதேதென்றால்: என் சிந்தனையினாலேயும், வாக்கினாலேயும், கிரியையினாலேயும் மகாபாவங்களைச் செய்தேனே! என் பாவமே! என் பாவமே! என் பெரும் பாவமே! ஆகையால் எப்பொழுதுங் கன்னியாயிருக்கிற முத்திப் பேறுபெற்ற மரியாயினையும், பிரதான சம்மனசாயிருக்கிற





முத்தனான மிக்கேலையும், ஸ்நாபகனாயிருக்கிற முத்தனான அருளப்பரையும், அப்போஸ்தலரா யிருக்கிற அர்ச். இராயப்பரையும், சின்னப்பரையும், சகல அர்ச்சியசிஷ்டவர்களையும், எனக்குக் குருவாயிருக்கிற உம்மையும் நம்முடைய கர்த்தரா யிருக்கிற சர்வேசுரனிடத்திலே எனக்காக வேண்டிக்கொள்ள வேணுமென்று மன்றாடுகிறேன். ஆமென் சேசு.



## உத்தம மனஸ்தாப மந்திரம்.

அனந்த தயை சுரூபியாயிருக்கிற என் சர்வேசுரா சுவாமி! தேவரீர் அளவில்லாத சகல நன்மையும் நிறைந்தவராய் இருக்கிறபடியினாலே எல்லாத்தையும் பார்க்க உம்மை நான் முழுமனதோடே சிநேகிக்கிறேன். இப்படிப்பட்ட தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேனென்கிறதினாலே மிகவும் மனநொந்து மெத்த மனஸ்தாபமாயிருக்கிறேன். எனக்கு இதுவே



மனஸ்தாபமில்லாமல் வேறே மனஸ்தாபமில்லை. எனக்கு இதுவே துக்கமில்லாமல் வேறே துக்கமில்லை. இனிமேல் ஒருக்காலும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லையென்று கெட்டியான மனதுடனே பிரதிக்கினை பண்ணுகிறேன். பின்னையும் என் பலம் போதாதென்கிறதினாலே, சேசுநாதசுவாமி பாடுபட்டு சிந்தின திரு இரத்தப் பலன்களைப் பார்த்து, என் பாவங்களையெல்லாம் பொறுத்து, எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் மோட்ச பாக்கியத்தையும் தந்தருளுவீரென்று முழுமனதோடே நம்பியிருக்கிறேன். திருச்சபை விசுவாசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களையெல்லாம் தேவரீர் தாமே அறிவித்தபடியினாலே நானும் உறுதியாக விசுவாசிக்கிறேன்,--ஆமென் சேசு.

குறிப்பு-இந்த ஜெபத்தில் பாவத்திற்கு உத்தம மனஸ்தாபப்பட செய்ய வேண்டிய முயற்சிகள் இருப்பது மல்லாமல், விசுவாசம், நம்பிக்கை, தேவ சிநேகமென்கிற முயற்சிகளு மடங்கியிருக்கின்றன. பாவப்பொறுத்தல் அடையும்போதும், பிரதிதினம் ஆத்துமசோதனை செய்த பின்னும் இரவு சயனிக்கப் போகுமுன்னும் சொல்லத்தக்க உத்தம ஜெபம்.

அர்த்தம்.

1. அனந்த நன்மை சுரூபியாயிருக்கிற என் சர்வேசுர சுவாமி! தேவரீர் அளவில்லாத சகல நன்மையும் நிறைந்தவராயிருக்கிறபடியினாலே, எல்லாத்தையும் பார்க்க உம்மை நான் முழுமனதோடே சிநேகிக்கிறேன்.—அனந்த-முடிவில்லாத சு- நல்ல; ரூபி-உருபத்தை யுடையவர், சுரூபியாயிருக்கிற - நன்மையை இயல்பாகக் கொண்டவராயிருக்கிற.



தேவசிநேக முயற்சி.—அளவில்லாத கிருபையைச் சுபாவமாய்க் கொண்டிருக்கிற என் பரம கர்த்தாவே! உம்மிடத்தில் சகல நன்மைகளும் மட்டின்றிச் சம்பூரணமா யிருக்கிறபடியால், சகலத்தையும் விட உம்மை என் முழு இருதயத்துடன் சிநேகிக்கிறேன்.

2. இப்படிப்பட்ட தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேனென்கிறதினாலே மிகவும் மனநொந்து மெத்த மனஸ்தாபமா யிருக்கிறேன்—மெத்த-அதிக, மனம்-மனது, தாபம்-துக்கம். (மனஸ்தாபம் இருவகைப்படும். அவையாவன: உத்தம மனஸ்தாபம், அடிமை மனஸ்தாபம். உத்தம மனஸ்தாபம் தேவஸ்நேகத்தினால் மனத்தில் உதிக்கும் துக்கம். அடிமை மனஸ்தாபம் தேவ பயத்தினால் உண்டாகும் மனத்துயரம்.)

உத்தம மனஸ்தாப முயற்சி.—இப்படிச் சகல நன்மை நிறைந்த சர்வேசுரனாகிய உமக்கு ஏற்காத துரோகங்களை நான் செய்ததை நினைத்து வெகுவாக துக்கப்படுகிறேன்.

எனக்கிதுவே மனஸ்தாபமல்லாமல் வேறே மனஸ்தாபமில்லை, எனக்கிதுவே துக்கமில்லாமல் வேறே துக்கமில்லை,—

இந்த துக்கம் வேறெவ்விதப் பொல்லாப்பினால் வரும் துக்கத்தைவிட மேலானதாயிருக்கிறது. எனக்கு இக்கஸ்தியைவிட மேலான கஸ்தி வருவிக்கக் கூடுமானது இவ்வுலகிலொன்றுமில்லை.

3. இனிமேல் ஒருக்காலும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லையென்று கெட்டியான மனதுடனே பிரதிக்கினை பண்ணுகிறேன்—பிரதிக்கினை-தீர்மானம்.

பிரதிக்கினை முயற்சி.—இவ்விதமாய் உமக்குப் பொருந்தாததும், அரோசிக



மானதுமான பாவங்களை இனியொருபோதும் எப்படிப்பட்ட துன்ப இடையூறுகள் வந்தாலும் மனம்பொருந்திச் செய்யமாட்டேன் என்று உறுதியான மனதோடு தீர்மானஞ் செய்கிறேன்.

4. பின்னையும் என் பலம் போதாதென்கிறதினாலே சேசுநாதசுவாமி பாடுபட்டுச் சிந்தின திருஇரத்தப்பலன்களைப் பார்த்து, என் பாவங்களையெல்லாம் பொறுத்து, எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும், மோட்ச பாக்கியத்தையும் தந்தருளுவீரென்று முழு மனதோடே நம்பியிருக்கிறேன்—வரப்பிரசாதம்-நாம் புண்ணியத்தைச் செய்து மோட்சத்தை அடையும்படி சர்வேசுரன் நமக்கு உபகாரமாக அளிக்கும் மேலான உதவி-சகாயம்; வரம்-கொடை; பிரசாதம்-தேவகிருபை; (சர்வேசுரன் தமது

கிருபையினால் நமக்குக் கொடுக்கும் மேலான பேருபகாரம்.)

நம்பிக்கை முயற்சி,—என் திர்மானப்படி நடக்க எனக்கு திராணியில்லாததால், எனது நம்பிக்கையெல்லாம் என் இரட்சகரான சேசுநாதர்பேரில் வைத்திருக்கிறேன். அவர் எனக்காகச் சிந்தின பரிசுத்த இரத்தப் பலன்களைப் பார்த்து, தேவரீர் என் பாவங்களை யெல்லாம் மன்னித்து, நான் இனிமேல் பாவத்தில் விழாமல், உத்தம புண்ணியங்களைச் செய்வதற்கு வேண்டிய வரப்பிரசாதத்தினைக்கொடுத்து, மோட்ச பாக்கியத்தைத் தந்தருளுவீரென்று முழுமனதோடு நம்பியிருக்கிறேன்.

5. திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களை யெல்லாம் தேவரீர் தாமே அறிவித்தபடியினாலே நானும் உறுதியாக விசுவாசிக்கிறேன்.

விசுவாசமுயற்சி—தவறா வரம் பெற்ற சத்திய திருச்சபை படிப்பிக்கிற



வேத சத்தியங்களை யெல்லாந் தேவரீர் தாமே அறிவித்ததாக நான் விசுவசிப்பதால் அவைகளையெல்லாஞ் சத்திய பிரமாணமென்று முழுமனதோடு ஏற்றுக்கொள்ளுகிறேன்.

ஆமென்சேசு.

என் இரட்சகரே! எனக்கு அப்படியே ஆகக்கடவது.

## நாம் முழுமனதோடு அரோசித்து விலக்கவேண்டிய பாவங்கள்.

1. இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுக்குப் பொருந்தாத பாவங்கள், ஆறு.

1-வது. சர்வேசுரனுடைய தயவை மதியாமலும் பாவத்திற்கு ஆக்கினை வருமென்று அஞ்சாமலும் பாவத்தில் விழுகிறது. 2-வது. அவநம்பிக்கைப் படுகிறது. 3-வது. தெளிவாயிருந்தும் விரோதிக்கிறது. 4-வது. பிறருடைய நன்மையின்மேல் பொறாமைப் படு

கிறது. 5-வது. துர்க்கருத்திலே ஒட்டாரமா யிருக்கிறது. 6-வது. கடைசி பரியந்தம் மனந்திரும்பா திருக்கிறது.

குறிப்பு-நன்லைமத்தனத்திற்கு மூலாதாரமாயிருக்கிற இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுக்கு விரோதமாக, துஷ்டர் தங்கள் மூர்க்கத்தனத்தால் மேற்பட்ட பாவங்களைக் கட்டிக்கொண்டு, கடைசியாய் அவநம்பிக்கையென்னும் பாவத்தோடு இறப்பார்களாதலால், இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் அப்படிப்பட்டவர்களுக்குப் பொறுத்தல் இராதென்று நமது ஆண்டவர் கடூரமாக வாக்கிட்டிருக்கிறார்.

---

## 2. பரலோகமட்டும் அபயமிடும் பாவங்கள் நான்கு.

1-வது. வேணுமென்று கொலை செய்கிறது. 2. சுபாவத்திற்கு அடாத மோகபாவஞ் செய்கிறது.,



3-வது. ஏழைகளையும், கைம்பெண்சாதிகளையும், தாய்தகப்பனற்றவர்களையுங் கெடுக்கிறது. 4-வது: உழைத்தவர்களுக்குக் கூலி கொடாதிருக்கிறது.

குறிப்பு—உலக மகிமைப் பிரதாபம், தனம், காமாதுர விச்சை என்னும் முக்குற்றங்களின்பேரில் வைத்த அபேட்சையில் சிக்கிய பாபிஷ்டிகள் பூலோகத்தில் செய்துவரும், அநீதங்களை-அக்கிரமங்களை, அட்டூழியங்களைச் சகியாத நீதியுள்ள தேவன் அவர்களை இப்பூலோகத்தில் தானே கடினமாய்த் தண்டிப்பாரென்பதால், இப்பாவங்கள் பரலோகமட்டும் பழிவாங்க அபயமிடும் பாவங்கள் என்று சொல்லப்படுகின்றன.

---

## 3. பிறர் பாவத்தில் விழக் காரணமாயிருக்கும் வழிகள் ஒன்பது.

1-வது. பிறருக்குத் துர்ப்புத்தி சொல்லுகிறது. 2-வது. பாவஞ்

செய்யக் கட்டளையிடுகிறது. 3-வது. அதற்குச் சம்மதிக்கிறது. 4-வது. அதற்கு சுறுசுறுப்பு வருத்துகிறது. 5-வது. அதைப் புகழுகிறது. 6-வது. அதை வெளிப்படுத்த வேண்டியபோது மறைக்கிறது. 7-வது. அதற்கு உதவியாயிருக்கிறது. 8-வது. அதற்கு மவுனமாயிருக்கிறது. 9-வது. அதைக் காப்பாற்றுகிறது.

குறிப்பு.--இவைகள் கொலைசெய்யாமலிருப்பாயாக என்ற ஐந்தாங் கற்பனையைச்சார்ந்த இடறல் பாவங்கள் என்கலாம். எப்படியெனில், வழிப்போக்கர்கள் நடுவழியில் கிடக்கிற கல்லின்மேரில் மோதி இடறிவிழுகிறாப்போல, ஒரு பாவி தன் வார்த்தையினாலும், கிரியையினாலும் மற்றவர்களுடைய ஆத்துமத்தைத் தன்வசப்படுத்திக்கொண்டு அதைப்பாவத்திற்கிழுத்து ஞான கொலை செய்பவனாயிருக்கிறான். அத்தகைய



பாபிஷ்டிகளை விலகி எச்சரிக்கையோடு நடந்துகொள்ளவேண்டும்.

## பாவத்தை விலக்கி நடக்க உதவியான வழி.

மனுஷருடைய முடிவு நான்கு.

முதலாவது-மரணம்.
இரண்டாவது-தீர்வை.
மூன்றாவது-மோட்சம்.
நாலாவது-நரகம்.

குறிப்பு.--நாம் நினையாத வயதில்-காலத்தில்-இடத்தில் மரணம் நமக்கு சம்பவிக்குமென்றும், உடனே நமது ஆண்டவர் தமது நீதியின்படி நாம் கட்டிக்கொண்ட பாவ புண்ணியங்களை விசாரித்து, நித்திய சம்பாவனைக்கோ அல்லது நித்திய நரகாக்கினைக்கோ அனுப்புவாராயிருக்கிறாரென்றும் நாம் மனதில் அடிக்கடி நினைத்துக்கொண்டு வந்தால், பாவத்தில் விழாமல் தப்பித்துக்கொள்ளுவோம்.

## புண்ணியங்கள்.

1. தேவசம்பந்தமான புண்ணியங்கள் மூன்று.

1-வது. விசுவாசம். 2-வது. நம்பிக்கை. 3-வது. தேவசிநேகம்.

குறிப்பு—இப்புண்ணியங்கள் ஞானஸ்நானத்தினால் நமது ஆத்துமத்தில் உற்பத்தியாகும். நாம் நமது புத்தி, மனது, இருதயங்களை சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து, அவரோடு [illegible] உறவு சம்பந்தம் உண்டுபண்ணிக்கொள்வதினால், இவைகளுக்கு தேவசம்பந்த புண்ணியங்களென்னப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் சர்வேசுரனை விசுவசித்து, அவரையே நம்பி, அவரையே சிநேகித்துவரும் பழக்கமுண்டாகப் பிரதிதினமும், விசேஷமாய் மரண வேளையிலும் இம்மூன்று புண்ணியங்கள் அடங்கிய முயற்சிகளைச் செய்துவருவது அவசியமாமே.

அர்த்தம்.

1 விசுவாசம்.—தேவன் சத்தியசுரூபி. ஆதலால், அவர் திருவாய்



மலர்ந்தருளியவைவெல்லாம் சத்தியமானவையென்று நாம் முழுமனதோடு ஏற்றுக்கொள்வது மல்லாமல், அவர் போல் திருச்சபை போதிக்கும் போதனையையும் தேவவாக்காக அங்கிகரிப்பதே விசுவாசமாகும்.

2. நம்பிக்கை.—சர்வேசுரன் கொடுக்கவிருக்கும் மோட்சானந்த பாக்கியத்தை அடையவேண்டிய உதவி வரங்களையெல்லாம் சேசுநாதருடைய திருப்பாடுகளின் பலனால் பெறுவோமென்று ஆசித்து நடப்பது நம்பிக்கையாகும்.

3. தேவசிநேகம்.—படைப்புண்ட சகல வஸ்துக்களைப்பார்க்கிலும் தேவனை நமது முழுமனதோடு நேசித்து, அவரைப்பற்றி அவருடைய பிள்ளைகளும் நமது சகோதரருமான சகலரையும் யாதோர் வித்

தியாசமின்றி அன்பு பாராட்டி உபசரித்துவருவது தேவ சிநேகமாகும்.

இவைகளுக்கு விரோதமான பாவங்கள்.

1. விசுவாசத்திற்கு விரோதம்: (1) சர்வேசுரன் கற்பித்ததின்மட்டில் மனது பொருந்தி சந்தேகித்தல். (2) அதற்காக தன் பிராணனைக் கொடுக்கவேண்டியிருக்கும்போது மறுதலித்தல். (3) அஞ்ஞானிகள், பதிதர்கள் முதலியவர்களுடைய ஆராதனை, திருவிழாக்களுக்குப் போதல்; அவைகளுக்கு உதவி புரிதல் ஆகிய இவைகள் பாவமாகும். இவைகளை ஒருவன் செய்து வருவானானால் விசுவாசத்தை இழந்துபோவான்.

நம்பிக்கைக்கு விரோதம்—(1.) மிதமிஞ்சின நம்பிக்கை: இரக்கமுள்ள



ஆண்டவர் என்னை எப்படியும் இரட்சிப்பார் என்று யாதோர் புண்ணியமுஞ் செய்யாமல் மூடநம்பிக்கை வைக்கிறதும். (2.) அவநம்பிக்கை: நாம் என்ன செய்தாலும் இரட்சிக்கப்படமாட்டோம் என்ற வீண் நினைவுக்கு இடந்தந்து, சர்வேசுரனின் தயவை நம்பாமலிருக்கிறதும் பாவமாகும். இவைகளால் நம்பிக்கையென்னும் புண்ணியம் நமது ஆத்துமத்தில் அற்றுப்போம்.

தேவசிநேகத்திற்கு விரோதம்:— நமதுபுறத்தியாரைச் சர்வேசுரனைப்பற்றி எப்போதுஞ் சிநேகிப்பதற்குப்பதிலாக பகை, சண்டை, சச்சரவு, காய்மகாரம், பழிவாங்குதல், அநியாயமாக நஷ்டம் வருவித்தல், துர்மாதிரிகைக் காட்டல், கோள்குண்டணி சொல்லுதல் முதலியவைகள் தேவ சிநேகத்திற்கு விரோதமான

பாவங்களாகும். இவைகளால்தேவசிநேகம் நமது ஆத்துமத்தில் அழிந்துபோகும்.

---

### நன்னடத்தைக்கடுத்த பிரதான புண்ணியங்கள் நான்கு.

1வது: விவேகம்.
2வது: நீதி.
3வது. மனத்திடன்.
4வது. மட்டசனம்.

### அர்த்தம்.

1-விவேகம். நாம் செய்யவேண்டியவை எவை யென்றும், தவிர்க்கவேண்டியவை எவையென்றும் நமது புத்திக்கு எடுத்துக்காட்டி, காலத்திற்கும் இடத்திற்குந் தகுந்த வண்ணம் ஆலோசனை கொடுத்து நடத்தும் இந்தவிவேகத்தை சகல புண்ணியங்களுக்கும் இராக்கினி யென்பார்கள்.

2-நீதி. நாம் ஒவ்வொருவருக்குஞ் செலுத்த வேண்டியவைகளைச் செலு



த்தி, நமது சித்தத்தைச் சீர்படுத்தி, கடவு நேர் நிலைமையில் நம்மை நிறுத்தி, சரீரத்திற் கடுத்தவைகளைச் சரீரத்திற்கும், ஆத்துமத்திற் கடுத்தவைகளை ஆத்துமத்திற்கும் வரையறுத்துக் காட்டுகிற புண்ணியமாகும்.

3-மனத்திடன். உலகம், பசாசு, சரீரம் இவைகளாலுண்டாகும் இச்சைகளையடக்கிப் புண்ணியத்தைச் செய்யும்போதும், பாவத்தைத் தவிர்க்கும்போதும் உண்டாகக்கூடிய சகலவித இக்கட்டு, இடையூறு, கஷ்டங்களை ஜெயித்து சர்வேசுரனின் திருச்சித்தத்திற்கு அமைந்து நடக்க உதவிபுரியும் புண்ணியம்.

4-மட்டசனம். இப்பூலோக சுக செல்வ இன்பங்களை சர்வேசுரனின் கட்டளைக்கு மீறாத மட்டுமிதமாக உபயோகித்து, நமது சரீர இச்சைகளையடக்கிப் புண்ணியத்தில் வர்த்திக்க உதவிபுரியும் புண்ணியமாகும்.

### புத்திக்கடுத்த புண்ணியங்கள்.

1. இஸ்பிரீத்து சாந்துவின் வரப்பிர

சாதங்கள் ஏழு.

1. ஞானம், 2. புத்தி, 3. விமரிசை, 4. திடம், 5. அறிவு, 6 பக்தி: 7. தெய்வ பயம்.

குறிப்பு-இவ்வரப்பிரசாதங்களை இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் உறுதிபூசுதலில் நமக்குக் கொடுத்துவருகிறார். இவைகளின் பிரயோசனத்தை நாம் நன்கறிந்து, இவைகளை நமது தின அனுசரணையிற் கொண்டுவர அடிக்கடி இஸ்பிரீத்து சாந்துவைப் பிரார்த்தித்துவருவோமாக.

அர்த்தம்.

1-ஞானம்: சர்வேசுரனையுந் தன்னையும் அறிந்துக்கொள்வது ஞானமாகும்.

2-புத்தி: உலகத்தில் நடந்தேறும் விஷயங்கள் சவேசுரனின் திருச்சித்தத்தால் தான் ஆகுமென்று உணர்ந்து தக்கபடி நடந்துகொள்வது புத்தியாகும்.



3-விமரிசை; இவ்வுலகபொருட்கள், சுகங்கள் நமது ஆத்தும இரட்சணயத்திற்கு எவ்வளவு அவசியமோ அம்மட்டும் அவைகளை ஏற்றுக்கொண்டு, அதற்கு விக்கினமாயிருப்பவைகளைத் தவிர்த்து ஒழுகுவது விமரிசையாகும்.

4-திடம்: மோட்சத்தைச் சம்பாதிக்கும்போது நேரிடுஞ் சகல தின்மைகள், இடைஞ்சல்கள், விக்கினங்கள் முதலியவைகளைப் பொருட்பண்ணாது, சர்வேசுரன் திருச்சித்தப்படி நடக்கத் திராணி தருவது திடனாகும்.

5-அறிவு: இன்னதைச் செய்யலாம் இன்னதைச் செய்யலாகாது என்று விமரிசையுடன் தெரிந்துகொண்டு நாம் நடந்துகொள்ள வேண்டிய வழியைக் காட்டுவது அறிவாகும்.

6-பக்தி: சர்வேசுரன் தந்த கட்டளை சித்தத்தின்படியே நடந்து ஒழுகுவது பத்தியாகும்.

7-தெய்வபயம்: சர்வேசுரன் நமது கண்முன் நிற்கின்றார், நம்மைப் பார்க்கின்றார்; நம்மை ஓர் நாள் கடின கணக்குக் கேட்பார் என்று பயந்து எச்சரிக்கையோடு நடந்து கொள்வது தெய்வபயமாகும். ஆதலால் இத்தெய்வபயம் சகல புண்ணியங்களுக்கும் அஸ்திவாரம்.

---

2. இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுடைய ஞானக் கனிகள்-

பன்னிரண்டு.

1-பிறர்சிநேகம், 2-ஞான சந்தோஷம், 3-சமாதானம், 4-பொறுமை, 5-தயை, 6-நன்மைத்தனம், 7-ஒறுப்பு; 8-சாந்தகுணம், 9-விசு



வாசம், 10-மரியாதை, 11-நிக்கிரகம், 12-கற்பு.

குறிப்பு-இஸ்பிரீத்து சாந்துவானவரால் நாம் அடையும் ஞானபலன்களின் பிரயோசனமென்ன வெனில்: சிநேகம் என்னும் ஞானபலனால் நாம் சர்வேசுரனோடு ஒன்றித்து ஐக்கியப்படுகிறோம். 2-ஞான சந்தோஷத்தினால் நமது ஆத்துமம் பரிசுத்த ஆவலைக் கொண்டிருக்கும். 3-சமாதானத்தினால் நமது ஆத்துமம் தன் அகத்தில் யாதோர் கலக்கமுறாது சமாதான நிலையில் நின்றிருக்கும். 4-பொறுமையினால் நமது இஷ்டத்திற்கு நேர் விரோதமாகச் சம்பவிப்பவைகள் எல்லாவற்றையும் மகா தாழ்ச்சியுடன் அனுபவிப்போம். 5-தயையினால் நமது சகோதரருடைய வறுமை இக்கட்டுகளை அன்புடன் தீர்க்கத் தீவிரிப்போம். 6-நன்மைத்தனத்தினால் சகலமான பேர்களுக்கும் உதவி புரிய பரோபகார விருப்பமுள்ளவர்களாயிருப்போம். 7-ஒறுப்பினால் நாம் சர்வே

சுரனைக் கேட்ட மன்றாட்டை அடையா
தபோது அவநம்பிக்கைப்படாமல் பொறு
மையுடன் அவர் சித்தத்திற்கு எதிர்
பார்த்திருப்போம். 8-சாந்த குணமான
து நமது சரீரத்தில் தன் ஆசாபாசத்தி
னுல் உக்கிரமமாக எழும்பும் ஆசைகளை
யடக்கி யாளவும், ஒருபோதும் முறு
முறுப்பாய்க் குறைசொல்லத் துணியா
மலும், நம் துநேயர்களுடன் நாம் செய்து
வரும் வருத்துப்போக்கு வியவகார விஷ
யங்களில் ஆத்திரப்படாமல் நடது சுபா
வ உணர்ச்சிகளை யடக்கி அன்புள்ளவர்க
ளாக நடந்து கொள்ளவும் செய்யும். 9-
விசுவாசமானது நாம் சர்வேசுரனுடைய
தவறா வாக்கில் முழு பற்றுதல் வைத்
திருக்கச்செய்யும். 10-மரியாதை நமது
சரீரத்தின் வெளிப்பார்வையில் கொண்
டிருக்கவேண்டிய நாணம் அச்சம் முத
லியவைகளைக் காப்பாற்றி வரும். 11-நிக்
கிரகம் நம்மைத் தாழ்த்தவும், நமது
சுபாவ இச்சைகளின்பேரில் வெறுப்புக்
கொள்ளவும் செய்யும். 12 கற்பு என்னும்
இந்தப்புண்ணிய கனியால் இஸ்பிரீத்து சா



ந்துவுக்கு தேவாலயமாகச் சமர்ப்பிக்கப்
பட்ட நமது சரீரத்தின் பரிசுத்தத்தனத்
தை யாதோர் பழுதின்றி பாதுகாத்து,
அவருடைய உபகார சகாயத்தால் நமது
ஆத்தும பரிசுத்ததனத்தையும், இவ்வுல
கில் காப்பாற்றி மரித்தபின் சுவிசேஷ
த்தில் சொல்லப்பட்டபடியே நித்தியா
னந்த பதவியில் சர்வேசுரனை என்றும்
முகமுகமாகத் தரிசிக்கும் பாக்கியத்தை
யும் பெற்றுக்கொள்ளுவோம். ஆதலால்
இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களை நாம்
தக்க விதமாகப் பெற்றுக்கொண்டபின்
இச்சிறந்த பலன்கள் யாவும் நம்மில்
தினந்தினம் அபிவிருத்தியாகும்படி அவ
ரை மன்றாடக்கடவோமாக.

### 3. சுவிசேஷத்தின் மேலான புத்திமதி மூன்று.

1-இச்சையுள்ள தரித்திரம்.
2-ஓயாத விரதத்துவம்.
3-பழுதற்ற கீழ்ப்படிதல்.

குறிப்பு—சுவிசேஷத்தில் எடுத்துக்
காட்டியபடி தம்மைப் பின்சென்று
சாங்கோ பாங்கத்தில் அபிவிருத்தி

யுடைய ஆசிப்பவர்களுக்கு நமது ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளிய புண்ணியங்களாகும்.

அர்த்தம்.

1-இச்சையுள்ள தரித்திரம்—முழு மனதுடன் உலக சம்பத்தை முற்றும் வெறுத்து தாரித்திரத்தையேற்றுக் கொள்ளல்; 2-நித்திய விரத்தத்துவம் மரணபரியந்தம் கற்பை காப்பதாக வாக்குக் கொடுத்தல்; 3-பழுதற்ற கீழ்ப்படிதல்—தன் மனதை வெறுத்துப் பெரியவர்களுக்கு - சிரேஷ்டர்களுக்கு சகலத்திலும் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளல்.

4—மேலான நற்கிரியைகள் மூன்று.

1-தானம், 2-ஜெபம், 3-உபவாசம்.

குறிப்பு. நாம் தான தருமத்தினால் இவ்வுலக வஸ்துக்களின் பேரிலுள்ள பற்றுதலை நீக்கவும், ஜெபத்தினால் தானென்ற ஆங்காரத்தை யடக்கி சர்வேசுரன் சமூகத்தில் தாழ்ச்சியோடு மன்றாடவும், உபவாசத்தினால் நமது சரீர இச்



சைகளை யடக்கி புண்ணியத்தில் வர்த்திக்கவும் உபயோகமாகும் சிறந்த புண்ணியங்களாம்.

## தேவதிரவிய அனுமானங்கள் ஏழு.

1-ஞானஸ்நானம், 2 உறுதிப்பூசுதல், 3-நற்கருணை, 4-பச்சாத்தாபம், 5-அவஸ்தைப்பூசுதல், 6-குருத்துவம், 7-மெய்விவாகம்.

அர்த்தம்.

தேவதிரவியம் - இஷ்டப் பிரசாதம். அனுமானம்-அடையாளம். (தேவ இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்க இயேசுநாதசுவாமி உண்டாக்கின அடையாளமென்று அறிந்துகொள்க.)

ஆதலால் அந்தந்த தேவதிரவிய அனுமானத்திற்குரிய பொருளையும், வார்த்தையையும் அதிகாரமுள்ளவர்கள் தகுந்த கருத்தோடு

நிறைவேற்றும்போது, உடனே ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கு தேவ இஷ்டப்பிரசாத வரங் கிடைக்குமென்பது வேத சத்தியமாமே.

குறிப்பு.—ஞானஸ்நானமும் பச்சாத்தாபமும் ஞான உயிரில்லாதவர்களுக்கும், மற்றவைகள் இஷ்டப்பிரசாதத்தோடிருக்கிறவர்களுக்கும் நியமிக்கப்பட்டிருக்கின்றன. ஞானஸ்நானம், உறுதிபூசுதல், குருத்துவம் ஆகிய இம்மூன்றும் ஆத்துமத்தில் அழியாத ஞான அட்சரங்களைப் பதிப்பிப்பதால் அவைகளை ஒரே விசை மாத்திரம் பெறலாம். மற்றவை நம்மை வரப்பிரசாத அந்தஸ்தில் நிறுத்தி, அர்ச்சியசிஷ்டதனத்தைப் பெறச்செய்வதால் அவைகளையடிக்கடி பெறலாம்.

---

### ஆத்தும சம்பந்தமான புண்யங்கள் ஏழு.

1-நல்ல புத்தி சொல்லுகிறது. 2-தெரியாதவர்களுக்கு படிப்பிக்கி



றது. 3-தப்பிப் போகிறவர்களைக் கண்டிக்கிறது. 4-கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேறுதல் சொல்லுகிறது. 5-நிந்தைகளைப் பொறுமையுடன் சகிக்கிறது. 6-பொல்லாப்புகளைப்பொறுத்துக்கொள்ளுகிறது. 7-ஜீவியர்களுக்காகவும், மரித்தவர்களுக்காகவும் சர்வேசுரனை மன்றாடுகிறது,-ஆமென்சேசு.

---

### சரீர சம்பந்தமான புண்ணியங்கள் ஏழு



முதலாவது:— பசியாயிருக்கிறவர்களுக்குப்போசனங் கொடுக்கிறது.



இரண்டாவது:— தாகமாயிருக்கிறவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கிறது.




மூன்றாவது:— வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுக்கிறது.



நான்காவது:— பரதேசிகளுக்கு இடங் கொடுக்கிறது.





ஐந்தாவது:— காவலிலேயிருக்கிறவர்களைச் சந்திக்கிறதுமல்லாமல், வியாதியாயிருக்கிறவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறது.



ஆறாவது:— அடிமைகளை மீட்கிறது.

ஏழாவது:—மரித்தவர்களை அடக்கம் பண்ணுகிறது. ஆமென் சேசு.



குறிப்பு.—தன்னைத்தான் நேசிக்குமாப்போல் மற்றவர்களையும் நேசிக்க வேண்டிய கட்டளையை தேவன் நமக்குத் தந்திருப்பதால், இப்புண்ணியங்களை நாம் அனுசரிக்கும்போது நமது புறத்தியாரான சகோதரருடைய ஆத்தும சரீரத்திற்கு வேண்டிய உதவி ஒத்தாசை உபகாரங்களைச் செய்துவருகிறோம். அதனால் நாம் தேவ தயவை எளிதில் பெற்று, சிரஞ்சீவிகளாய் இப்புவியில் வாழ்ந்து மறுவுலகத்தில் ஆண்டவர் தரவிருக்கும் நித்தியானந்த பாக்கியத்தைப் பெற்றுக் கொள்பவர்களாவோம்.

—:*_*:—

## நமது இரட்சகர் மலையின்மீது திருவாய் மலர்ந்தருளிய அஷ்ட பாக்கியங்கள்.

1. மனத்தரித்திரர் பாக்கியவான்கள்; ஏனெனில், மோட்ச இராச்சியம் அவர்களுக்கே சொந்தமாயிருக்கிறது.

2. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.



3. அழுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே ஆறுதலை யடைவார்கள்.

4. நீதியின்மேற் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே திருப்தி யடைவார்கள்.

5. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே இரக்கமடைவார்கள்.

6. தூய இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே சர்வேசுரனைத் தரிசிப்பார்கள்.

7. சமாதான குணத்தோர் பாக்கியவான்கள்; ஏனெனில் சர்வேசுரனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவார்கள்.

8. நீதியினிமித்தம் உபத்திரவப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களுக்கே மோட்ச இராச்சியம் சொந்தமாயிருக்கிறது.

# சின்ன குறிப்பிடம்.

## முதற் பிரிவு.

### ஏக திரித்துவ சர்வேசுரன் பேரில்.

வினா:—சர்வத்துக்குங் கர்த்தாவா யிருக்கிறவர் யார்?

விடை.—சர்வேசுரன்.

எத்தனை சர்வேசுரன்?

ஒரே சர்வேசுரன்.

அவர் தேவசுபாவத்திலொருவராயிருந்தாலும் ஆள் வகையிலே எப்படி யிருக்கிறார்?

திரித்துவமா யிருக்கிறார்.

திரித்துவமா யிருக்கிறாரென்கிறதற்கு அர்த்தமென்ன?

ஆள் வகையிலே மூவரா யிருக்கிறாரென்று அர்த்தமாகும்.

மூன்றாட்களுக்கும் பெயரென்ன?

பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து.

பிதா சர்வேசுரனோ?

சர்வேசுரன்.

சுதன் சர்வேசுரனோ?



சர்வேசுரன்.

இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரனோ?

சர்வேசுரன்.

மூவரும் மூன்று சர்வேசுரனோ? ஒரே சர்வேசுரனோ?

ஒரே சர்வேசுரன்.

எப்படி ஒரே சர்வேசுரன்?

இந்த மூன்றாட்களுக்கும் ஒரே ஞானம், ஒரே சித்தம், ஒரே வல்லமை, ஒரே தேவ சுபாவம் இருக்கிறபடியினாலே மூவரும் ஒரே சர்வேசுரன்தான்.

இவர்களுக்குள்ளே வல்லமை, மகிமை, முதலான இலட்சணங்களில் வித்தியாசமுண்டோ?

இல்லை; மூவரும் எல்லாத்திலும் சரிசமானமா யிருக்கிறார்கள்.

இப்படி யேகமுந் திரித்துவமுமாகிய சர்வேசுரனுக்குப் பிரதான இலட்சணங்களெத்தனை?

ஆறு.

ஆறுஞ் சொல்லு?

முதலாவது-சர்வேசுரன் தாமாயிருக்கிறார். (மற்றதும் 5-ம் பக்கம் பார்க்க.)

## இரண்டாம் பிரிவு.

## உலக சிருஷ்டிப்பும் மனிதனுடைய கேடும்.

சர்வேசுரன் எல்லாத்துக்கும் ஆதிகாரணமா யிருக்கிறதெப்படி?

பரலோகத்தையும், பூலோகத்தையும், அவைகளி லடங்கிய சகலத்தையும் உண்டாக்கிக் காப்பாற்றுகிறதினாலே யெல்லாத்துக்கும் ஆதிகாரணமா யிருக்கிறார்.

அவர் உண்டாக்கினவைகளிற் பிரதானவஸ்துக்களென்ன?

அசரீரிகளாகிய சம்மனசுக்களும், ஆத்தும சரீரமுள்ள மனுஷர்களுந்தான்.

சம்மனசுக்களெல்லாருந் தங்கள் மேன்மையான அந்தஸ்தில் நிலைகொண்டார்களோ?

இல்லை; சிலர் ஆங்காரத்தினாலே மோட்சத்தை யிழந்து நரகாக்கினைக்கு உள்ளானார்கள்.

இப்படி கெட்டுப்போன சம்மனசுக்களின் பெயரென்ன?



பசாசுக்கள்.

சர்வேசுரன் மனுஷர்களை எதுக்காக உண்டாக்கினார்?

தம்மை யறிந்து சிநேகித்து சேவிக்கவும், அதனால் மோட்சத்தை யடையவும் உண்டாக்கினார்.

அவர் எந்த அந்தஸ்திலே ஆதித்தாய் ஆதித்தகப்பனை யுண்டாக்கினார்?

பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்திலே அவர்களை யுண்டாக்கினார்.

அவர்கள் அதைப் போக்கடித்த தெப்படி?

பசாசை நம்பி, சர்வேசுரனால் விலக்கப்பட்ட கனியைத் தின்றதினாலே போக்கடித்துக்கொண்டார்கள்.

அதினால் அவர்களுக்கும் அவர்கள் சந்ததியாருக்கும் வந்த கேடென்ன?

பசாசுக்கு அடிமையாகி, சாவு, நரகம் முதலிய ஆக்கினைகளுக்குப் பாத்திரவான்களானார்கள்.

## மூன்றாம் பிரிவு.

### மனுஷனுடைய இரட்சிப்பின் பேரில்.

நம்மை இரட்சிக்கிறதற்காக மனுஷனாகப் பிறந்தவர் யார்?

அர்ச். திரித்துவத்தின் இரண்டாமாளாயிருக்கிற சுதனாகிய சர்வேசுரன்.

அவர் எப்படி யுற்பவித்துப் பிறந்தார்?

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனாலே கருப்பமாயுற்பவித்து, அற்புதமாகப் பிறந்தார்.

ஆரிடத்திலே நின்று பிறந்தார்?

ஒருக்காலும் கன்னிமைகெடாத அர்ச். கன்னிமரியம்மாளிடத்திலே நின்று பிறந்தார்.

சுவாமி பிறந்து எட்டாம் நாள் அவருக்கு என்ன பெயரிட்டார்கள்?

சேசு என்கிற பெயரிட்டார்கள்.

சேசு என்கிற பெயருக்கு அர்த்தமென்ன?

நம்மை இரட்சிக்கிறவர்.

சேசுநாத சுவாமி இவ்வுலகத்திலே யெத்தனை வருஷகாலமிருந்தார்?

முப்பத்துமூன்று வருஷகாலமிருந்தார்.



இவ்வுலகத்திலென்ன செய்துகொண்டு வந்தார்?

சகல புண்ணியங்களையும் அற்புதங்களையுஞ் செய்து, தம்முடைய திவ்விய வேதத்தைப் போதித்து, அப்போஸ்தலர்களை யேற்படுத்தினார்.

சேசுநாத சுவாமிக்கு எத்தனை சுபாவமுண்டு?

தேவசுபாவம் மனுஷ சுபாவம் ஆக விரண்டு சுபாவமுண்டு.

எந்த சுபாவத்திலே பாடுபட்டார்?

மனுஷ சுபாவத்திலே பாடுபட்டார்.

ஆருக்காக பாடுபட்டார்?

நமக்காக பாடுபட்டார்.

என்ன பாடுபட்டார்?

போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தில் மிகுந்த பாடுபட்டு, சிலுவையிலறையுண்டு, கடினமான மரணத்தை யடைந்து, கல்லறையில் அடக்கப்பட்டார்.

அப்போது சுவாமியுடைய திரு ஆத்துமம் எங்கே போயிற்று?

பாதாளங்களிலே யிறங்கி அங்கே யிருந்த புண்ணியாத்துமாக்களுக்கு மோட்ச

பாக்கியங் கொடுக்கப் போயிற்று.

சேசுநாதசுவாமி கல்லறையை விட்டு உயிர்த்தெழுந்தருளினாரோ?

மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தருளினார்.

உயிர்த்த பிற்பாடு பூலோகத்திலே எத்தனை நாளிருந்தார்?

நாற்பதுநாள் இருந்தார்.

அந்த நாற்பது நாளும் என்னசெய்து கொண்டு வந்தார்?

அநேகம் விசை தம்முடைய சீஷர்களுக்கு பிரத்தியட்சமாகத் தம்மைக் காணுவித்து, அவர்களை வேத சத்தியங்களில் ஸ்திரப்படுத்திக்கொண்டுவந்தார்.

நாற்பதாம் நாள் எங்கே யெழுந்தருளிப் போனார்?

பரமண்டலங்களிலே யெழுந்தருளி, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்.

இப்போது சேசுநாதசுவாமி யெங்கே யிருக்கிறார்?

சர்வேசுரனாகியமட்டும் எங்குமிருக்கிறார். மனுஷனாகியமட்டும் பரலோகத்திலுந் திவ்விய நற்கருணையிலு மிருக்கிறார்.



---

## நான்காம் பிரிவு.

### இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனத்தின் பேரிலும், திருச்சபையின் பேரிலும்.

சேசுநாதசுவாமி பரலோகத்துக்கெழுந்தருளின பத்தாம்நாள் என்ன செய்தார்?

தம்முடைய அப்போஸ்தலர்களுக்குத் திடனாக இஸ்பிரீத்துசாந்துவை யனுப்பினார்.

இஸ்பிரீத்துசாந்துவை யடைந்தபின் அப்போஸ்தலர்கள் என்னசெய்தார்கள்?

உலகத்தினெத்திசையிலும் பிரசங்கித்துத் திருச்சபையை ஸ்தாபித்தார்கள்.

திருச்சபைக்குத் தலைவரா யிருக்கிறவரார்?

சேசுநாத சுவாமிதான்.



அவர் தமக்குப் பதிலாகப் பிரத்தியட்சத் தலைவராக ஆரை ஸ்தாபித்தார்?

அர்ச்சியசிஷ்ட இராயப்பரை ஸ்தாபித்தார்.

அர்ச். இராயப்பருக்குப் பதிலாகத் திருச்சபைக்குத் தலைவராயிருக்கிறவர் ஆர்?

அர்ச். பாப்பானவர்.

மற்ற அப்போஸ்தலர்களுக்குப் பதிலாயிருக்கிறவர்கள் ஆர்?

மேற்றிராணிமார்கள்.

சேசுநாதரும் அப்போஸ்தலரும் எத்தனை திருச்சபையை ஸ்தாபித்தார்கள்?

கத்தோலிக்கென்கிற ஒரே திருச்சபையை ஸ்தாபித்தார்கள்.

அதற்குப் புறம்பாயிருக்கிறவர்களுக்கு மோக்ஷமுண்டோ?

இல்லை.



இல்லை என்கிறதற்கு திருஷ்டாந்தமென்ன?

திருச்சபையின் சொற்படி கேளாதவன் அஞ்ஞானியைப்போல உனக்கு ஆகக்கடவான் என்று கர்த்தர் திருவுளம்பற்றினார்.

## ஐந்தாம் பிரிவு.

### மனிதருடைய முடிவுகளின்பேரில்.



பாவத்தினிமித்தம் சகல மனுஷர்களுக்கும் வருகிற ஆக்கினை யென்ன?

சாவு.

சாவுக்குப் பின் சம்பவிக்கிறதென்ன?

தனித்தீர்வை.

தனித்தீர்வைக்குப் பிறகு சாவான பாவமுள்ள ஆத்துமாக்கள் எங்கே போகிறார்கள்?

நரகத்துக்குப் போகிறார்கள்.

பரிசுத்த ஆத்துமாக்களெங்கே போகிறார்கள்?

மோட்சத்துக்குப் போகிறார்கள்.

தங்கள் பாவங்களுக்காக முழுதும் உத்தரியாத புண்ணிய ஆத்துமாக்கள் எங்கே போகிறார்கள்?

உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் போகிறார்கள்.



உத்தரிக்கிற ஸ்தலத்திலே என்னமாயிருக்கிறார்கள்?




தங்கள் பாவங்களுக்குத் தக்க வேதனைப்பட்டு உத்தரிக்கிறார்கள். முழுதும் உத்தரித்த பிறகு மோட்சத்தை அடைவார்கள்.

தனித்தீர்வை அல்லாமல் வேறே தீர்வையுண்டோ?

பொதுத் தீர்வையுண்டு.

பொதுத் தீர்வை எப்போது நடக்கும்?



உலகத்தின் முடிவிலே நடக்கும்.

உலகமெப்படி முடியும்?

உலகமெல்லாம் நெருப்பினாலே வேக, மனுஷரெல்லாருஞ் செத்துப் போவார்கள்.

பின்னுமென்ன சம்பவிக்கும்?

சேசுநாதசுவாமி மனுஷரெல்லோரையும் ஆத்தும சரீரத்தோடே கூட எழுப்பி, மிகுந்த வல்லபத்தோடே நடுத்தீர்க்க வருவார்.

எப்படி நடுத்தீர்ப்பார்?



அவனவன் செய்த பாவ புண்ணியங்களை யெல்லாம் சகலருக்கு முன்பாக அறியப்பண்ணி, பாவிகளைச் சபித்து நரகத்திலே தள்ளி, நல்லவர்களை ஆசீர்வதித்து மோட்சத்துக்குக் கூட்டிக்கொண்டு போவார்.



பாவிகள் நரகத்திலே படுகிற ஆக்கினை யென்ன?

சர்வேசுரனை ஒருக்காலுங் காணாமல், ஊழியுள்ள காலம் பசாசுக்களோடு நெருப்பிலே வெந்து, சகல ஆக்கினைகளையு மனுபவிக்கிறார்கள்.


நல்லவர்கள் மோட்சத்தில் அனுபவிக்கும் பாக்கியமென்ன?

சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசித்து, எப்போதைக்கும் சகல பேரின்ப பாக்கியங்களையும் அனுபவிக்கிறார்கள்.

## ஆறாம் பிரிவு

### பத்து கற்பனைகள் திருச்சபை கட்டளைகள் இவைகளின் பேரில்,

மோட்சத்தை யடைகிறதற்கு வேதசத்தியங்களை விசுவசிக்கிறது போதுமா?




போதாது; சர்வேசுரனுடைய கற்பனைகளையும், திருச்சபையின் கட்டளைகளையும் அநுசரித்துப் பாவத்தைத் தள்ளிப் புண்ணியத்தைச் செய்யவும் வேண்டியது.

சர்வேசுரனுடைய கற்பனைகள் எத்தனை?

பத்து.

பத்துஞ் சொல்லு?

சர்வேசுரன் நமக்கு அருளிச்செய்த வேதகற்பனை...மற்றதும் 34-ம் பக்கம் காண்க.

திருச்சபையின் கட்டளைகளெத்தனை?

ஆறு.

ஆறுஞ் சொல்லு?

ஞாயிற்றுக் கிழமையிலேயும் கடன் திருநாட்...மற்றதும் 44-ம் பக்கம் காண்க.

பாவமாவதென்ன?



தேவகட்டளையை மீறுகிறதே பாவம்.

எத்தனைவகைப் பாவமுண்டு?

ஜென்மப்பாவங் கர்மப்பாவம் ஆகிய இரண்டுவகைப் பாவமுண்டு.

ஜென்மப் பாவமாவதென்ன?

ஆதித்தாய் ஆதித்தகப்பனாலே யுண்டாகி, நம்மோடேகூடப் பிறக்கிற பாவம்.

கர்மப்பாவமாவதென்ன?

அவரவர் புத்தி விவரம் அறிந்த பிற்பாடு மனது பொருந்திச் செய்கிற பாவம்.

கர்மப்பாவம் எத்தனை வகையுண்டு?

சாவான பாவம் அற்பப்பாவம் ஆகிய இருவகையுண்டு.

சாவான பாவம் ஆவதென்ன?

தேவ இஷ்டப்பிரசாதத்தை போக்கடித்து நம்மை நரகத்துக்குப் பாத்திரவான்களாக்குகிற பாவம்.

அற்பப்பாவம் ஆவதென்ன?

தேவ இஷ்டப்பிரசாதத்தைக் குறைத்துச் சாவான பாவத்துக்கு வழியுமாகி

நம்மை உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் பாத்திரவான்களாக்குகிற பாவம்.

---

## ஏழாம் பிரிவு.
## தேவ அனுக்கிரகத்தினவசரம், ஜெபம், தேவதிரவிய அனுமானங்களின் பேரில்.

பாவத்தை விலக்கி மோட்சத்தை யடைகிறதற்கு நம்முடைய சொந்த பலம் போதுமோ?

போதாது; நமக்கு தேவவரப்பிரசாதத்தின் அனுக்கிரகம் வேண்டியது.

தேவவரப்பிரசாதத்தை யடைவதெப்படி?

செபத்தினாலுந் தேவதிரவிய அனுமானங்களாலும் அடையலாம்.


ஆகையால் அடிக்கடி செபம் பண்ண வேண்டுமோ?

வேண்டுமென்று கர்த்தர் கற்பித்தார்.

தேவதிரவிய அனுமானங்கள் எத்தனை?



ஏழு.



ஏழுஞ் சொல்லு?

1-வது, ஞானஸ்நானம், 2-வது, உறுதிப்பூசுதல் 3-வது, நற்கருணை 4-வது, பச்சாத்தாபம், 5-வது, அவஸ்தைப் பூசுதல், 6-வது, குருத்துவம், 7-மெய்விவாகம்.

ஞானஸ்நானமாவதென்ன?

ஜென்மப் பாவத்தையும் கர்மப்பாவத்தையும் போக்கி, நம்மைச் சர்வேசுரனுக்குந் திருச்சபைக்கும் பிள்ளைகளாக்குகிற தேவதிரவிய அநுமானம்.

உறுதிப்பூசுதலாவதென்ன?

நம்மைச் சத்தியவேதத்திலே திடப்படுத்துகிறதற்காக இஸ்பிரீத்து சாந்துவையும் அவருடைய வரப்பிரசாதங்களையும் நமக்குக் கொடுக்கிற தேவதிரவிய அநுமானம்.

நற்கருணையாவதென்ன?

அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும், முந்திரிகைப்பழ இரசத்தின் குணங்களுக்குள்ளேயும் சேசுநாதசுவாமியுடைய திருச்சரீரமும், திரு இரத்தமும், திரு ஆத்துமமும், தேவசுபாவமும் அடங்கியிருக்கிற தேவதிரவிய அநுமானம்.

பச்சாத்தாபமாவதென்ன?

ஞானஸ்நானம் பெற்றபிற்பாடு செய்த பாவங்களையெல்லாம் விமோசனமாக்குகிற தேவதிரவிய அநுமானம்.

அவஸ்தைப்பூசுதலாகிறதென்ன?



வியாதிக்காரர்களிடத்தில் மீதியாகிய பாவங்களுக்குப் பரிகாரமாகவும், அவர்களுடைய ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் ஆறுதலாகவும் உண்டாக்கப்பட்ட தேவதிரவிய அநுமானம்.

குருத்துவமாவதென்ன?

திவ்விய பூசை பண்ணவும், தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றவும் சுதந்தரம் கொடுக்கிற தேவதிரவிய அநுமானம்.

மெய்விவாகம் ஆவதென்ன?

சமுசாரியாகிறவர்களுக்குத் தேவ ஆசீர்வாதத்தையும், அவர்கள் தர்ம வழியாய் நடக்கவும், தங்கள் பிள்ளைகளைத் தக்கபிரகாரமாய் நடப்பிக்கவும் வேண்டிய தேவசகாயத்தைக் கொடுக்கிற தேவதிரவிய அநுமானம்.

## ஞானஸ்நானங் கொடுக்கிற வகை.

ஞானஸ்நானங் கொடுக்கிறதெப்படி?

முதலாவது: திருச்சபை ஞானஸ்நானங் கொடுக்கிற கருத்தோடே நாலும்

ஞானஸ்நானங் கொடுக்கிறேனென்று மனதில் நினைத்துக்கொள்ளுகிறது 2-வது: பிள்ளைக்கு இடவேண்டிய பெயரை யுச்சரித்து அதன் தலைமேல் தண்ணீர் வார்க்கிறபோது தான்தானே சொல்லவேண்டியதாவது.

✠ பிதாவுடையவும் ✠ சுதனுடையவும் ✠ இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே நான் உன்னைக் கழுவுகிறேன்.

அவ்வேளை சமயத்தில் ஆராகிலும் ஞானஸ்நானங் கொடுக்கவேண்டியதோ?

அப்படிப்பட்ட சமயத்தில் ஆராகிலும் கொடுக்கவேண்டியதுதான்.

## பாவசங்கீர்த்தனத்துக்கு வேண்டிய காரியங்கள்.

பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறதற்கு எத்தனை வகை காரியம் வேண்டும்?

ஐந்து வகை காரியம் வேண்டும்.

அவ்வைந்து காரியத்தையுஞ் சொல்லு?



முதலாவது, செய்த பாவங்களையெல்லாம் நினைக்கிறது; 2வது: செய்த பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்படுகிறது; 3வது: இனிமேல் ஒருக்காலும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லையென்று கெட்டியான மனதுடனே பிரதிக்கினை செய்கிறது; 4வது: செய்த பாவங்களையெல்லாம் ஒன்றும் ஒளியாமல் குருவிடமே சொல்லுகிறது; 5வது: குரு கட்டளையிட்ட அபராதத்தைத் தீர்க்கிறது.

## தேவநற்கருணை ஆயத்தம்.



தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கிறவர் ஆர்?

சேசுநாதசுவாமிதான்.

அதிலே யெப்படி யெழுந்தருளியிருக்கிறார்?

நம்முடைய திரு ஆத்துமத்தோடேயும் திருச்சரீரத்தோடேயும் திரு இரத்தத்தோடேயும் தேவ சுபாவத்தோடேயும் மெய்யாகவே யெழுந்தருளி யிருக்கிறார்.

ஆகையால் தேவநற்கருணை வாங்குகிறபோது என்ன வாங்குகிறீர்கள்?

நம்முடைய திவ்விய கர்த்தராகிய சேசுகிறிஸ்துநாதருடைய திருச்சரீரத்தையும் திருஇரத்தத்தையும் திரு ஆத்துமத்தையும், தேவசுபாவத்தையும் தாமே வாங்குகிறோம்.

அதிலே அப்பம் இலவலேசமாகிலு முண்டோ?

அப்பத்தின் உருபம் உருசி முதலான குணங்கள் இருந்தாலும் அப்பமில்லை.

அப்பம் என்னமாய்ப் போயிற்று?

சேசுநாதருடைய திருச் சரீரமாக மாறிப்போயிற்று.

தேவநற்கருணையை வாங்குகிறதற்கு எத்தனைவகை ஆயத்தம் வேண்டியது?

ஆத்தும ஆயத்தம் சரீர ஆயத்தம் ஆகிய இருவகை ஆயத்தம் வேண்டியது.



ஆத்தும ஆயத்தம் ஆவதென்ன?


ஆத்துமம் சாவான பாவமில்லாமல் பரிசுத்தமாக இருக்கத்தக்கதாக நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்திருக்க வேண்டியது.

சரீர ஆயத்தமாவதென்ன?

நடுச்சாமந் துவக்கி தேவநற்கருணை வாங்குமட்டும் ஒன்றும் சாப்பிடாமலும் குடியாமலும், தாம்பூல முதலிய புறத்திப்பண்டங்களை வாயிலே போடாமலும் சுத்த உபவாசமா யிருக்கவேண்டியது,

சேசுநாதசுவாமி தேவநற்கருணையை யுண்டாக்கின முகாந்தரங்களெத்தனை?

நாலு: 1-வது, தம்முடைய மரணத்தை ஞாபகப்படுத்தவும், 2-வது திருச்சபைக்குத் துணையா யிருக்கவும், 3-வது நமதாத்துமத்துக்கு திவ்விய போசனமாகவும், 4-வது, தாம் சிலுவையில் செலுத்தின பலியை என்றென்றைக்கும் பூசையிலே தொடர்ந்து நடத்தவும் உண்டாக்கினார்.



## உறுதிப்பூசுதலைக் குறித்து சுருக்கமான ஞான உபதேசம்.

உறுதிப்பூசுதல் ஆகிறதென்ன?

நம்மை சத்தியவேதத்திலே திடப்படுத்துகிறதற்காக இஸ்பிரீத்து சாந்துவையும் அவருடைய வரப்பிரசாதங்களையும் நமக்கு கொடுக்கிற தேவதிரவிய அனுமானம்.

உறுதிப்பூசுதல் பெறச் செய்ய வேண்டியதென்ன?

கூடினமாத்திரம் வேதசத்தியங்களையறிந்திருக்கவும், பாவமின்றி தேவவரப்பிரசாதத்தோடிருக்கவும் வேண்டும்.



இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுடைய வரங்கள் எத்தனை?

ஏழு.

ஏழுஞ் சொல்லு?

1-வது, ஞானம்...மற்றதும் 71-ம் பக்கம் பார்க்கவும்.

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுடைய ஞானக்கனிகள் எத்தனை?

பன்னிரண்டு.

அவை யாவை?

1-வது: பிறர் சிநேகம்...மற்றதும் 76-ம் பக்கம் பார்க்கவும்.

சாவான பாவத்தோடு இந்த தேவதிரவிய அனுமானத்தைப் பெறுகிறவர்கள் கட்டிக்கொள்ளுகிற பாவமென்ன?

தேவ துரோகத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள்,

எத்தனைவிசை உறுதிப்பூசுதல் பெறலாம்?

ஞானஸ்நானத்தைப்போல ஒரே விசை மாத்திரம் பெறலாம்,

உறுதிப்பூசுதல் கொடுக்கும் போது மேற்றிராணியார் செய்கிற சடங்கென்ன?

உறுதிப்பூசுதல் பெறுகிறவர்கள் பேரிலே கைகளை விரித்து இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் அவர்கள்பேரிலே இறங்கிவர மன்றாடுகிறார்.

இன்னும் அவர் செய்கிற சடங்கென்ன?

உறுதிப்பூசுதல் பெறுகிறவர்களுடைய நெற்றியில் பரிமள தைலத்தைச் சிலுவை யடையாளமாகப் பூசி கன்னத்திலே தட்டுகிறார்.

எதுக்காக நெற்றியிலே சிலுவை யடையாளமாகப் பரிமள தைலத்தைப் பூசுகிறார்?

உறுதிப்பூசுதல் பெறுகிறவர்கள் இஸ்பிரீத்துசாந்துவினுடைய வரப்பிரசாதத்தை சம்பூரணமாகப் பெறுகிற வடையாளமாக.

எதுக்காக மேற்றிராணியார் கன்னத்தில் தட்டுகிறார்?



உறுதிப்பூசுதல் பெற்றவர்கள் சேசுக்கிறிஸ்துநாதரைப்பற்றிச் சகல விதனிர்ப்பந்தங்களையும் அனுபவிக்க முஸ்திப்பாயிருக்கவேண்டுமென்பதே.

உறுதிப்பூசுதல் பெற்றபின்பு செய்யவேண்டியதென்ன?

1-வது, இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் நமக்குக் கொடுத்த பலனை நம்மிடத்தில் உறுதிப்படுத்த அவரை மன்றாடுகிறது. 2-வது, எச்சரிக்கையோடே பாவச்சமயத்துக்குத் தப்பித்துக்கொள்ள பிரயாசைப்படுகிறது. 3-வது, நம்மை சர்வேசுரனுக்குப் பிரியமுள்ளவர்களாக்கி நித்திய பாக்கியத்திற்குப் பாத்திரவான்களாக்கும் புண்ணியங்களைச் செய்கிறது.

# RESPONSIONES AD MISSAM.

## பூசை உதவி மந்திரம்.

---

குரு—இன்த்ரோயிபோ அத் அல்தாரே தேயி.

சீஷன்—அத் தேயும் குயி லெதிபிகாத் ஜூவென்தூதெம் மேயாம்.

கு—ஜூதிக்கா மெ, தேயுஸ், எத் திசெர்னெ கௌசாம் மெயாம் தெ ஜென்தெ நோன் சான்க்தா, அப் ஹோமினெ இனிக்வோ எத் தொலோசோ எருவெமெ.

சீ—குயா தூ எஸ், தேயுஸ், பொர்த்திதூதோ மெயா: குவாரே மெ ரெபுலிஸ்தி? எத் குவாரே திரிஸ்திஸ் இன்செதோ, தும் அப்லிஜித் மெ இனிமிகுஸ்?

கு—எமித்தெ லூசெம் தூவாம், எத் வெரித்தாதெம் தூவாம்: இப்சா மெ தெ



டுக்சேருன்த் எத் அதுக்சேருன்த் இன் மோன்த்தெம் சான்க்தும் தூவும், எத் இன் தாபேற்னகுலா தூவா.

சீ—எத் இன்த்ரோயிபோ அத் அல்த்தாரே தேயி. அத் தேயும் குயி லெதிபிகாத் ஜூவென்தூதெம் மேயாம்.

கு—கொன்பிதெபோர் திபி இன் சித்தரா தேயுஸ், தேயுஸ் மேயுஸ்: குவாரே திரிஸ்திஸ் எஸ், ஆனிமா மேயா, எத் குவாரே, கொன்தூர்பாஸ் மே?

சீ—ஸ்பேரா இன் தேயோ க்வோனியாம் அதுக் கொன்பிதெபோர் இல்லி சலுதாரே வுல்த்துஸ் மேயி எத் தேயுஸ் மேயுஸ்.

கு—க்ளோரியா பாத்ரி, எத் பீலியோ, எத் ஸ்பிரித்தூயி சான்க்தோ.

சீ—சிக்குத் எருத் இன் ப்ரின்சிபியோ, எத் நூங்க், எத் செம்பெர் எத் இன் சேகுலா சேகுலோரும் ஆமென்.

கு—இன்த்ரோயிபோ அத் அல்த்தாரே தேயி.

சீ—அத் தேயும் குயி லெதிப்பிகாத் ஜூவென்தூதெம் மேயாம்

கு—அஜூதோரியும் நோஸ்த்ரும் இன் நோமினே தோமினி.

சீ—குயிபேசித் சேலும் எத் தெர்ரும்.

கு—கொன்பீதெயோர் தேயோ...... அத்தோமினும் தேயும் நோஸ்த்ரும்.

சீ—மிசெரெயாத்தூர் துயி ஓம்னீ பொதென்ஸ் தேயுஸ், எத் திமிஸ்ஸிஸ் பெக்காத்திஸ் தூயிஸ் பேர்தூகாத் தெ அத்வீதாம் எத்தெற்றேம்.

கு—ஆமென்.

சீ—கொன்பீதேயோர் தேயோ ஓம் னிபொதென்தி, பெயாதே மரியே செம்பெர் வீர்ஜினி, பெயாதோ மிகாயேலி அற்கான்ஜெலோ, பெயாதோ ஜொவான்னி பப்திஸ்தே, சாங்திஸ் அப்போஸ் தொலிஸ் பெத்ரோ எத் பவ்லோ, ஓம்னி புஸ்சாங்க்திஸ், எத்திபியாத்தெர்: குய்யா பெக்காவி நீமிஸ் கொஜிதாசியோனெ, வேர்போ, எத் ஓபெரெ, மெயாகுல்பா, மெயா குல்பா, மெயா மாக்சிமா குல்பா



இதெயோ ப்றெகோர் பெயாதாம் மரியாம் செம்பெர் வீர்ஜினெம், பெயாத்தும் மிக்காயேலெம் அர்க்கான்ஜெலும், பெயாத்தும் ஜொவான்னெம் பப்திஸ்தாம், சாங்தோஸ் அப்போஸ்தொலோஸ் பேத்ரும் எத் பவுலும், ஓம்னெஸ் சாங்தோஸ், எத் தெ பாத்தெர், ஓராரே ப்ரோ மெ அத்தோமினும் தேயும் நோஸ்த்ரும்.

கு—மிசெரெயாதூர் வெஸ்திரி ஓம்னிப்பொதென்ஸ் தேயுஸ், எத் திமிஸ்சிஸ் பெக்காதிஸ் வெஸ்திரிஸ் பெர்தூகாத் வோஸ் அத் வீதாம் எத்தெர்றேம்.

சீ—ஆமென்.

கு—இந்தூல்ஜென்சியாம் அப்சொலூசியோனெம் எத் ரெமிஸ்சியோனெம் பெக்காதோரும் நொஸ்த்ரோரும் த்ரிபுவாத் நோபிஸ் ஓம்னிபொத்தென்ஸ் எத் மிசெரிகோர்ஸ் தோமினுஸ்.

சீ—ஆமென்.

கு—தேயுஸ் து கொன்வெர்சுஸ் விவிபிகாபிஸ் நோஸ்.

சீ—எத் ப்ளெப்ஸ் துவா லெதாபிதுர் இன் தெ.

கு—ஒஸ்தெந்தே நோபிஸ், தோமினே, மிசெரிகோர்தியாம் துவாம்.

சீ—எத் சலுதாரே தாவும் தா நோபிஸ்.

கு—தோமினே, எக்சவுதி ஓராசியோனெம் மேயாம்.

சீ—எத் கிளாமோர் மெயுஸ் அத் தெ வேனியாத்.

கு—தோமினுஸ் வோபிஸ்கும்.

சீ—எத் கும் ஸ்பிரீத்து தூவோ.

கு—கீரியெ எலேயிசோன்.

சீ—கீரியெ எலேயிசோன்.

கு—கீரியெ எலேயிசோன்.

சீ.—கிறிஸ்தெ எலேயிசோன்.

கு.—கிறிஸ்தே எலேயிசோன்.

சீ.—கிறிஸ்தெ எலேயிசோன்.

கு.—கீரியே எலேயிசோன்.

சீ.—கீரியே எலேயிசோன்.



கு—கீரியே எலேயிசோன்.

கு—தோமினுஸ் வோபிஸ்கும்.

சீ—எத் கும் ஸ்பிரீத்து தூவோ.

ஓரேமுஸ் முடிவில்.

கு.—பேர் ஓம்னியா செகுலா செகுலோரும்.

சீ.—ஆமென்.

நிருபத்து முடிவில்.

சீ.—தேயோ க்ருசியாஸ்.

குரு வாசித்து முடித்தபின் சீஷன் புஸ்தகந் திருப்புகிறது.

சுவிசேஷத் துவக்கத்தில்.

கு.—தோமினுஸ் வோபிஸ்கும்.

சீ.—எத் கும் ஸ்பிரீத்து தூவோ.

கு—செக்வென்சியா சான்க்தி எவான்ஜேலியி செக்குந்தும்.....

சீ.—க்ளோரியா திபி தோமினே.

## சுவிசேஷ முடிவில்.

சீ.—லாவ்ஸ் திபி கிறிஸ்தே.

கு.—தோமினுஸ் வோபீஸ்கும்,

சீ.—எத் கும் ஸ்பிரீத்து துவோ.

குரு பாத்திரத்தைத் திறந்து அப்பத்தை காணிக்கை கொடுக்கும்போது, சீஷன் இரசம், தண்ணீர் கொடுக்கிறது. பிறகு அவர் விரல்களின் பேரில் தண்ணீர் வார்க்கிறது.

கு.—ஓராத்தே ப்ருத்றேஸ்.

சீ.—சுசிப்பியாத் தோமினுஸ் சாக்றிபீசியும் தெ மானிபுஸ் துயிஸ் அத் லவ்தெம் எத் க்ளோரியாம் நோமினிஸ் சுயி அத் உதிலிதாதெம் கோக்வே நோஸ்த்ரும் தோசியுஸ்க்வே எக்லேசியே சுயே சாங்க்தே.

கு.—பேர் ஓம்னியா சேகுலா சேகுலோரும். சீ.—ஆமென்.

கு.—தோமினுஸ் வோபிஸ்கும்.



சீ.—எத் கும் ஸ்பிரீத்து துவோ.

கு.—சுர்சும் கோர்தா.

சீ.—ஹபேமுஸ் அத் தோமினும்.

கு.—க்ருசியாஸ் அகாமுஸ் தோமினோ தேயோ நோஸ்த்ரோ.

சீ.—திக்னும் எத் ஜூஸ்தும் எஸ்த்.

குரு சாங்க்துஸ் என்கிற தோத்திர ஜெபம் சொல்லும்போது சீஷன் கை மணி அடிக்கிறது.

குரு பூசைப்பாத்திரத்தின் பேரில் கைநீட்டி வைக்கிறபோது சீஷன் சற்றே மணி தட்டுகிறது.

குரு தேவநற்கருணை எழுந்தருளப் பண்ணுகிற இரு முறையிலுஞ் சீஷன் மணி அடிக்கிறது.

கு.—பெர் ஓம்னியா சேகுலா சேகுலோரும்.

சீ.—ஆமென்.

குரு பாத்தேர் நோஸ்தர் என்கிற பரமண்டல மந்திரத்தை ஆரம்பித்து முடிவில்—எத் நெ நோஸ் இந்துகாஸ் இன் தெந்தாசியோனெம் என்று சொன்னபின்

சீ.-செத் லீபெரா நோஸ் ஆ மாலோ.

கு.-பேர் ஓம்னியா சேகுலா சேகுலோரும்,

சீ.-ஆமென்.

கு.-பாக்ஸ் தோமினி சித் செம்பேர் வோபிஸ்கும்.

சீ.-எத் கும் ஸ்பிரீத்து துவோ.

குரு "தோமினே நோன் சும் திங்னுஸ்" என்று பிறைதட்டிக் கொள்ளுகிறபோது சீஷன் மும்முறை மணி அடிக்கிறது.

ஆபத்தக்காரர் இருந்தால் மணி அடித்து, கொன்பிதேயார்...சொல்லுகிறது.



அதன்பின் பூசைப் பாத்திரந் திறக்கும்போது சீஷன் குப்பி கொண்டுவருதல்.

குரு பாத்திரத்தில் கை கழுவின பிறகு சீஷன் மறுபடியும் புஸ்தகத்தைத் திருப்புகிறது.

கு.-தோமினுஸ் வோபிஸ்கும்.

சீ.-எத் கும் ஸ்பிரீத்து துவோ.

## ஓரேமுஸ் முடிவிலே.

கு.-பேர் ஓம்னியா சேகுலா சேகுலோரும்.

சீ.-ஆமென்.

கு.-தோமினுஸ் வோபிஸ்கும்.

சீ.-எத் கும் ஸ்பிரீத்து துவோ.

கு.-ஈதே மிஸ்ஸா எஸ்த் (அல்லது) பெனெதிகாமுஸ் தோமினோ.

சீ.-தெயோ க்ரேசியாஸ்.

## ஆத்மாக்கள் பூசையில்.

கு.-ரெக்குயெஸ்க்காண்த் இன் பாசே.

சீ.-ஆமென்.

## குரு ஆசீர்வாதங் கொடுத்தபின்.

சீ.-ஆமென்.

கு.-தோமினுஸ் வோபிஸ்கும்.

சீ.-எத் கும் ஸ்பிரீத்து தூவோ.

கு.-அனிசியும் சான்க்தி எவான்ஜெலியி செக்குந்தும் ஜோவான்னெம்.

சீ.-க்ளோரியா திபி தோமினெ.

கடைசி சுவிசேஷ முடிவில்.

சீ.-தேயோ க்ருசியாஸ்.

---

## PRECES POST MISSAM.

### பூசை முடிந்தபின் வேண்டுதல்.

(13-ம் சிங்கராயர் உத்தாரப்படி).

கு.-ஆவே மரியா க்ருசியா ப்ளேனா தோமினுஸ் தேகும் பெனதிக்தா து இன்



முலியேரிபுஸ் எத் பெனெதிக்துஸ் ப்ருக்துஸ் வென்த்ரிஸ் தூயி ஜேசுஸ்.

சீ.-சான்க்தா மரியா மாத்தெர் தேயி ஓரா ப்ரோநோபிஸ் பெக்காதோரிபுஸ் நுன்க் எத் இன் ஹோரா மோர்த்திஸ் நோஸ்த்ரெ, ஆமென்.

கு.-சான்க்தா தெயி ஜெனித்ரிக்ஸ்.

சீ.-உத் திக்னி எப்பீசியாமுர் ப்ரோமிஸ்ஸியோனிபுஸ் க்றிஸ்தி.

கு.-தோமினும் நோஸ்க்ரும்.

சீ.-ஆமென்.

கு.-இன்பெர்னும் தெத்ருதெ.

சீ.-ஆமென்.

குருவானவர்.-கோர் ஜேசு சாக்ராதிஸ்ஸிமும் என்று சொல்லும் ஒவ்வொரு முறைக்கும்.

சீஷன்.-மிசெரேரே நோபிஸ்.—

என்று மறுமொழி சொல்லவும்.

## POST ASPESIONEM AQUAE BENEDICTAE.

### பூசைக்கு முன் தீர்த்தந் தெளித்த பின்

கு.-ஒஸ்தெந்தெ நோபிஸ் தோமினே மிசெரிகோர்தியாம் துவாம் *

சீ.-எத் சலுதாரே துவும் தா நோபிஸ் *

கு.-தோமினே எக்சௌதி ஓராசியோனெம் மேயாம்.

சீ.-எத் க்ளாமோர் மெயுஸ் அத் தெ வேனியாத்.

கு.-தோமினுஸ் வோபிஸ்கும்.

சீ.-எத் கும் ஸ்பிரீத்து துவோ.

செப முடிவில்.

கு.-ஒரேமுஸ் எக்சவுதி........பேர் கிறிஸ்தும் தோமினும் நோஸ்த்ரும்.

சீ.-ஆமென்.

---

* பாஸ்கு காலத்தில் அல்லேலூயா.





# கிறீஸ்துவனுடைய ஒழுக்கத்தைப்பற்றிய பொது அநுசரணை.

## I.

1. நாம் இரட்சண்ய மடையவேண்டுமானல் செய்யவேண்டியதென்ன?

விடை. நமது கர்த்தராகிய இயேசுநாதர் நமக்கு கற்பித்தபடி நடந்துகொள்ளவேண்டும்.

2. நமது இரட்சகர் என்ன கட்டளையிட்டிருக்கிறார்?

வி. நாம் எப்போதும் பாவத்தை அரோசித்து விலக்கி, சர்வேசுரனை நேசித்துவரவேண்டுமென்கிறார்.

3. பாவத்தை அரோசிப்பதெப்படி?

வி. இப்பூலோகத்தில் நமக்கு நேரிடும் சகல தின்மைகளிலும் பெரிதான தின்மை பாவமென்று எண்ணி, அதை பயத்தினாலாவது, நயத்தினாலாவது, வேறு யாதோர் பிரயோசனத்தை முன்னிட்டாவது மனதுபொருந்தி செய்யாமலிருக்க வேண்டும்.

4. சர்வேசுரனை நேசிப்பதெப்படி?

வி. சகலத்தையும்விட சர்வேசுரனை நமது முழு இருதயத்துடன் நேசிக்க வேண்டும்.

5. சர்வேசுரனை நேசிக்கக் கற்றுக்கொள்வதெப்படி?

வி. “ஆண்டவரே! என் தேவனே! உம்மையே நான் நேசிக்கும்படியாக எ



னக்கு அநுக்கிரகந் தந்தருளும்” எனத் தாழ்ச்சியுடன் தினமும் மன்றாடக்கடவோம்.

6. சர்வேசுரனுடைய நேசத்தினால் வரும் பிரயோசனமென்ன?

வி. அவருடைய நேசத்தை நாம் கொண்டிருந்தால், அவர் நமக்குச் செய்தருளிய நன்மைகளையெல்லாம் நாம் நினைவுகூர்ந்து நமது இருதயங்களில் அவருடன் அடிக்கடி சம்பாஷணைசெய்வோம். அவருக்கே எப்போதும் பிரியப்பட்டு நடக்க இவ்வுலகில் பிரயாசைப்படுவோம்.

7. நமது ஆண்டவர், நம்மில் ஒருவர் மற்றொருவரை நேசிக்கும்படியான கட்டளை கொடுத்திருக்கின்றாரோ?

வி. ஆம்! நமது சகோதரர்களில் ஒவ்வொருவனையும் யாதோர் வித்தியாசம் பாராட்டாமல் அன்புடன் நேசிக்கும்படியான கட்டளை கொடுத்திருக்கிறார்.

8. நாம் நமது சகோதரரை நேசிப்பதெப்படி?

வி. நமது சகோதரர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்படியாக நாம் கோரவேண்டும். அவர்களுடைய சுகக்ஷேமங்களுக்காக பிரதிதினமும் வேண்டிக்கொள்ளவேண்டும். நமது நினைவு, வார்த்தை, கிரியைகளினால் யாதோர் அற்ப தீங்கையும் அவர்களுக்கு செய்யாமலிருக்கவேண்டும்.

9. நமது சத்துராதிகளையும் நாம் நேசிக்கவேண்டுமோ?

வி. நமக்குத் தீங்கு செய்த கொடியவர்களை நேசிக்கவேண்டியதுடன், நாம் அவர்களுக்கு நமது முழுமனதுடன் பொறுத்தலளித்து, அவர்கள் சுகக்ஷேமத்துடன் வாழ்ந்திருக்கும்படியாக ஆசித்து, அவர்களுக்காக சர்வேசுரனைப் பார்த்து மன்றாடவேண்டும்.

10, நமது கர்த்தர் வேறு யாதோர் உத்தமநெறியைக் காட்டியிருக்கிறாரோ?

வி, ஆம், என்னைப் பின்தொடர ஆசிப்பவன் தன்னைப் பரித்தியாகஞ்செய்து, தன் சிலுவையை தினமுஞ் சுமந்து என்



னைப் பின் செல்லக்கடவான்' எனத் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

11. நாம் நம்மை பரித்தியாகஞ் செய்வதெப்படி?

வி. நாம் நமது சொந்த இஷ்டத்தை, மனதை அடக்கி, நமது ஆசாபாசங்களுக்கு நம்மைக் கையளிக்காமல் எச்சரிக்கையாக நடப்பதே பரித்தியாகஞ் செய்வதாகும்.

12. நாம் நம்மை என் பரித்தியாகஞ் செய்யவேண்டியது?

வி. சிறுபந் தொடங்கி நமது ஆசாபாசங்கள் நம்மைப் பாவங்களில் சிக்கும்படி செய்கிறதால், நாம் அவைகளை அடக்கியாளாமற்போனால், பிறகு நம்மைத் திருத்திக்கொள்ள இயலாதவர்களாய்ப்போவோம். அதனால் நரகத்திற்குப் பாத்திரவான்களாவோம்.

13. நாம் நமது சிலுவையை சுமப்பதெப்படி?

வி. சர்வேசுரன் நமக்குத் தந்த இச் சொற்ப ஜீவியகாலத்தில் நமக்கு நேரிடு

ம் சகல கஸ்தி துன்பங்களுக்காக முறை யிடாமல் அவைகளைப் பொறுமையுடன் சகித்து, அவருடைய திருச்சித்தத்திற்கு அமைந்து நடக்கவேண்டும்.

14. நாம் நமது ஆண்டவரைப் பின் தொடர்வதெப்படி?

வி. அவர் இப்பூலோகத்தில் ஜீவித்து வந்தகாலத்தில் நமக்குக் காட்டிவந்த நன்மாதிரிகையைப் பின்பற்றி, அவர் அநுசரித்துவந்த புண்ணியங்களைச் செய்து வரவேண்டும்.

15. நமது ஆண்டவர் நமக்குக் கற்றுக் கொடுத்த பிரதான புண்ணியங்களெ ன்ன?

வி. தாழ்ச்சி, பொறுமை, கீழ்ப்படித லாகும்.

15. நாம் இவ்வுலகில் ஜீவித்திருக்குந் தனையும் நாம் ஜெயித்தடக்கவேண்டிய சத்துருக்களெவை?

வி. உலகம், பசாசு, சரீரம்; இவைகள்தான் நமக்கு பிரதான சத்துருக்கள்



17. பசாசு என்றால் என்ன?

வி. ஆங்காரத்தால் கெட்டு, மோட்சத்தை யிழந்து, நரகாக்கினைக்குட்பட்ட தலையான லூசிப்பேர் என்றும் சம்மனசும் அதின் தூதர்களும் பசாசுக்கள். இவைகள், நாம் மோட்ச பாக்கியத்தை யடையாம லிருக்கும் படியாக நம்மைப் பாவத்தின்மூலமாக நரகத்திற்குப் பாத்திரவான்களாக்க இடைவிடாமல் பிரயாசைப்படுகின்றன.

18. உலகமென்றாலென்ன?

வி. இப்பூலோகத்தில் வெகு ஆவலுடன் தேடப்படும் உலக கேளிக்கை, ஐசுவரியம், சுகபோகம் முதலானவைகளை நிசமான பாக்கியங்களென எண்ணி, நாம் சர்வேசுரனைத் தேடவொட்டாமல் மதிமோசம் போக்கும் மித மிஞ்சின பற்றுதல்தான் உலகமாகும்.

19. பசாசும் உலகமும் ஏன் நமது சத்துருக்களெனச் சொல்லவேண்டும்?

வி. ஏனெனில், பசாசும் உலகமும் தந்திரமான வார்த்தைகளாலும், து

மாதிரிகையாலும் நரகத்தின் பாதையாகிய அகன்ற சுலபமான வழியில் நம்மை நடத்தி, நம்மை நரகத்திற்கு பாத்திரவான்களாக்க முயலுவதால் அவைகள் நமக்கு சத்துருக்களாமே.

20. சரீரம் என் நமது சத்துருவாகும்?

வி. சகல சத்துருக்களிலும் மகா கொடிதானது நமது சரீரம்: அதினின்று எழும்பும் ஆசாபாசங்கள் நமது புத்தியை மயக்கி, பாவத்திற்குட்படத் தூண்டுவதினால்தான் சரீரத்தை சத்துருவென்கிறோம்.

21. நமது சத்துருக்கள் நம்மை பாவத்தில் விழுக்காமலிருக்கும் பொருட்டு நாம் செய்யவேண்டியதென்ன?

வி. நாம் பாவத்தில் விழாமல் எச்சரிக்கையாயிருக்கும்படியாக நமது கர்த்தர் 'விழித்திருந்து ஜெபஞ்செய்யுங்கள்' என்று திருவுளம்பற்றியபடியே, அவருடைய தவ இஷ்டபிரசாதத்தை நாம் அடிக்கடி தாழ்ச்சியுடன் இரந்து மன்றாடவேண்டியதாம், தவிறேல் நம்மை யட-



க்கி, நாம் பாவஞ்செய்யக் காரணமாயிருப்பவர்களை விலகியிருப்பதும் அவசியமாமே.

22. மேற்சொல்லப்பட்ட மூன்று சத்துருக்களையும் நமது சொந்த பலத்தினால் ஜெயிக்கலாமோ?

வி. "என்னைத் திடப்படுத்துகிறவராகிய சர்வேசுரனில் எல்லாம் செய்ய வல்லவனாயிருக்கிறேன்" என்று அர்ச். சின்னப்பர் சொல்லியபடியே நம்முடைய பலத்தை நம்பாமல், சர்வேசுரனுடைய தயையின்பேரில் நம்பிக்கை வைத்து எச்சரிக்கையாக நடந்துவந்தால் தேவபலத்தால் எல்லா சத்துருக்களையும் வென்று ஜெயங்கொள்ளலாம்.

---

## II

## பிரதிதின அனுசரணை.

23. நாம் நித்திரையை விட்டெழுந்திருக்கும்போது செய்யவேண்டியதென்ன?

வி. அதிகாலையில் எழுந்து மேரை மரியாதையுடன் வஸ்திரந் தரித்துக்கொண்டு, காலை ஜெபம் செய்துகொள்ள வேண்டும்.

24. நாம் தினத்தை யெப்படி யாரம்பிக்கவேண்டும்?

வி. நாம் அதிகாலையில் எழுந்தவுடனே பத்தியோடு முழங்காலிலிருந்து சிலுவையடையாளம் வரைந்துகொண்டு, "ஆண்டவரே, என் சரீரம் ஆத்துமம் என் இருதயம் இவைகளை இன்று உமக்குப் பாதகாணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன்" என ஜெபிக்கவேண்டும்.

25. நாம் தினமும் திவ்விய பூசைகாணவேண்டுமோ?

வி. ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் பூசை காணக் கட்டளையில்லாதிருந்தாலும், தேவாலயம் அருகிலிருக்கும்போதும், நமக்குச் சாவகாசம், ஓய்வு, ஒழிவு இருக்கும்போதும் திவ்யபூசை காண்பது மகா உத்தமமும் நமக்கு மெத்த பலனுமுள்ள பக்திக் கிருத்தியமாகும்.



26. திவ்யபூசை யென்றாலென்ன?

வி. திருச்சிலுவைப் பலியின் ஞாபகக் குறிப்பாக நம்முடைய பீடங்களின் மேல் அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும், திராட்ச இரசத்தின் குணங்களுக்குள்ளேயும் நமதாண்டவராகிய இயேசுக்கிறிஸ்துநாதருடைய திருச்சரீரமும், திரு இரத்தமும், மரித்தவர்களுக்கும் சீவியர்களுக்கும் பிரயோசனமாக சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கப்படும் இரத்தஞ் சிந்தாத பலியே திவ்ய பூசை யெனப்படுவது.

27. திவ்வியபூசையைப் பலனோடு காண்பதற்கு என்ன செய்யவேண்டும்?

வி. பலனோடு திவ்வியபூசை காண்பதற்கு, துவக்கமுதல் கடைசிமட்டும் கவனம் பத்தியுடன் இயேசுநாதருடைய பாடுகளை நினைத்து அவருடைய பேறுபலன்களை நமக்கும் மரித்தவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கும்படியாக குருவானவருடன் ஏகோபித்து மன்றாடவேண்டும்.

28. பிரதிதினம் நாம் தியானஞ் செய்வதால் பிரயோசனமுண்டோ?

வி. பிரதிதினம் கால்மணிநேரமாவது தியானம் செய்வது மகா பிரயோசனமாகும். அர்ச்சியசிஷ்டவர்களெல்லோரும் தியானத்தினால் சாங்கோபாங்கமடைந்தார்கள்.

29. என்ன தியானம் செய்யவேண்டும்?

வி. மனுஷருடைய முடிவுகள் (67-ம் பக்கம்) நமது இரட்சகருடைய ஜீவிய கால சரிதை, திருப்பாடுகள் முதலியவைகளைப்பற்றித் தியானிக்கலாம்.

30. நாம் பிரதிதினமும், ஞான புத்தகங்களைப் படிக்கவேண்டுமோ?

வி. ஆம்; சுவிசேஷம், அர்ச்சியசிஷ்டவர்கள் சரிதை, கிறிஸ்துநாதர் அநுசாரம் முதலியவைகளையும், நமக்கு விசுவாசம் பத்தியை யூட்டி உலகத்தாரின் கள்ள ஞானத்தை நிவாரணமாக்கும் ஞான புத்தகங்களையும் பிரதிதினம் சிறிதுநேரமாவது படிக்கவேண்டும்.

31. நாம் சரீர போஷணையை யெவ்வண்ணம் நடத்தவேண்டும்?



வி. சாப்பிடுதல், தாகசாந்திசெய்தல் நித்திரைபோதல், விளையாடல் முதலியவைகளை யெல்லாம் மட்டுமிதமாக உபயோகஞ்செய்துகொண்டு இவைகளை யெல்லாம் சர்வேசுரனுக்குத் தோத்திரமாக ஒப்புக்கொடுக்க வேண்டும்.

32. சர்வேசுரன் நமக்குக் கொடுத்த உத்தியோக அலுவல்களை நாம் எப்படி பரிசுத்தப்படுத்திக்கொள்ளலாம்?

வி. நாம் செய்யவேண்டிய வேலைகளை நிறைவேற்றிவரும்போது சர்வேசுரனை நினைத்து, சிறு மனவல்லய ஜெபத்தால் அவைகளை ஒப்புக்கொடுத்துவருவோமாக. அவ்வண்ணம் செய்வதால் நமது மோட்ச பேறுபலனை அதிகரித்துக்கொள்வோம்.

33. பாவசமயத்திலே என்ன செய்ய வேண்டும்?

வி. நாம் நமதுபேரில் திருச்சிலுவை வரைந்துகொண்டு, "ஆண்டவரே! என்னை இரட்சியும். நீர் என்னைக் கைதூக்காவிடில் நான் நாசமாய்ப் போவேன்",

என்னும் மனவல்லய ஜெபத்தையாவது, அல்லது 'என் ஆண்டவளே! என் தாயாரே! நான் தேவரீருக்குச் சொந்தமாயிருக்கிறேனென்று நினைத்துக்கொள்ளும். என்னை உம்முடைய உடைமையாகவும் சுதந்தரப்பொருளாகவும் ஆதரித்துக் காப்பாற்றியருளும்' என்றாவது தேவதாயார் சகாயத்தை இரந்து மன்றாடவும்.

34. பாவத்தில் விழும் நிர்ப்பாக்கியம் சம்பவித்தால் என்ன செய்யவேண்டும்?

வி. நமது கர்த்தராகிய இயேசுநாதருடைய பாதாரவிந்தங்களில் வீழ்ந்து செய்தபாவத்திற்காக உத்தம மனஸ்தாபப்பட்டு கூடிய சீக்கிரத்தில் பாவசங்கீர்த்தனம் செய்துகொள்ளுகிறது.

35. நமது நேச ஆண்டவர் நமக்குப் பாரமான சிலுவையாகிற வியாதி, கஸ்தி, இக்கட்டு முதலிய துன்பங்களை யனுப்பும்போது நாம் என்ன செய்யவேண்டும்?

வி. "ஆண்டவரே என்னிஷ்டமல்ல, உமது திருச்சித்தப்படி ஆகக்கட-



வது. இந்த சிலுவையை என் பாவங்களுக்குப் பரிகாரமாக ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்று அவர் திருச்சித்தத்திற்கு அமைந்து நடந்துகொள்ளவேண்டும்.

36. நாம் தினத்தை எப்படி முடிக்கவேண்டும்?

வி. சாயந்திரம் வீட்டில் முழங்காலிலிருந்து இராச்செபத்தைச் செய்து, ஜெபமாலையையும், ஆர்ச், தேவமாதாவின் பிரார்த்தனையையும் சொல்லிக்கொள்ளும் வழக்கத்தை யனுசரிக்கவேண்டும்.

37. ஜெபமாலை யாவதென்ன?

வி. அது வாய்ச் செபமும் தியானச் செபமும் இணைந்த ஓர் உத்தம பத்திக் கிருத்தியமாகும். அதில் நமது கர்த்தர் மனிதாவதாரமெடுத்ததும், சிலுவையிலறையுண்டதும், உத்தானமானதுமான பிரதான வேதசத்தியங்களை நினைத்துக்கொண்டு, 153 பிரியதத்த மந்திரங்கள் தேவதாயாருக்குத் தோத்திரமாகச் செபிக்கப்படுகிறதாமே.

38. பலனுடன் ஜெபமாலை செபிப்பது எப்படி?

வி. சந்தோஷம், துக்கம், மகிமை தேவரகசியங்களை தியானித்துக்கொண்டு, நிதானமாகவும் மந்திரங்களின் வார்த்தைகளை வழுவில்லாமலும் உச்சரித்து, பராக்குக்கு இடமில்லாமலும் செபிக்கவேண்டும்.

39. நாம் இரவில் சாப்பிட்டபின் செய்யவேண்டியதென்ன?

வி. சயன ஆராதனை செய்து, அன்று நாம் கட்டிக்கொண்ட பாவங்களை நினைத்து துக்க மனஸ்தாபப்பட்டு, சர்வேசுரனுக்குச் சித்தமானால் நல்ல மரணம் கொடுக்கும்படியாக வேண்டிக்கொள்ளுகிறது.





## அதிகாலைச் செபம்.

### திரித்துவ தோத்திரம்.

✠ பிதாவுக்கும் சுதனுக்கும் இஸ்பிரீத்து சாந்துவுக்கும் தோத்திரமுண்டாகக்கடவது ஆதியிலேயும் இப்பொழுதும் எப்பொழுதும் அநாதி சதாகாலமும் இருக்கும்படியே, ஆமென் சேசு.

### விழிக்கிறபோது.

ஆண்டவரே! தேவனே! அடியேன் உமது திருச்சமுகத்தில் கண்விழிக்கிறேன். இன்று நான் யாதோர் பொல்லாய்

யைக் காணாமலும், நினையாமலும், செய்யாமலு மிருப்பேனாக! சேசுவே! என் மீது தயவாயிரும்.

## திரிகாலச் செபம்.

ஆண்டவருடைய சம்மனசானவர் மரியாயுடனே விசேஷஞ் சொல்லினார்; அவளும் இஸ்பிரீத்துசாந்துவினாலே கருப்பிணியானாள்.—பிரி.

இதோ ஆண்டவருடைய அடிமையானவள்: உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது.—பிரி.

வார்த்தையானது மாமிசமாகி, எங்களுடனே கூட வாசமாயிருந்தது.—பிரி.

சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத் தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களா யிருக்கத்தக்கதாக: சர்வேசுரனுடைய பரிசுத்த தேவமாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்,

சர்வேசுரா சுவாமி! சம்மனசு சொன்னதினாலே உமக்குக் குமாரனான சேசுக்



கிறீஸ்துநாதர் மனுஷனானதை அறிந்திருக்கிற நாங்கள் அவருடைய பாடுகளினாலேயும், சிலுவையினாலேயும் உத்தானத்தின் மகிமையை அடையத்தக்கதாக எங்களுக்கு அனுக்கிரகம் பண்ணியருளவேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.

பிதாவுக்கும் சுதனுக்கும் தோத்திர..... மற்றதும்—மும்முறை சொல்லிக்கொள்ளவும்.

## ஆராதனை.

பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவாகிய திரித்துவமும் ஏகமுமான சர்வேசுரா! நீரே மெய்யான தேவனும், என் ஆண்டவருமானதினால் உமக்குமாத்திரம் மிகுந்த வணக்கத்துடன் ஆராதனை செய்கிறேன். தேவரீர் என்னிடத்தில் யாதோர் பேறுபலனைக் காணாதிருக்கையில் என்னைச் சிருஷ்டித்து, இரட்சித்து, என்

னை உமது பிள்ளையாக எடுத்துக்கொண்டதினால் உமக்கே நன்றியறிந்த தோத்திரம் செய்கிறேன். கடந்த இரவில் என்னைப் பாதுகாத்து, இன்னும் உயிர் பிழைத்திருக்கச் செய்ததினாலும் அடியேனுக்குச் செய்த வேறநேக உபகாரங்களுக்காகவும் நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்! என் வாழ்நாட்களெல்லாம் உம்மையே நேசித்து, உமது திருநாமத்தைப் போற்றிப் புகழ்ந்து வருவேனாக. என் தேவனே, எனது நினைவு, ஆசை, வார்த்தை, கிரியை, வருத்தம் இவைகளெல்லாவற்றையும் இன்று என் ஆண்டவரான சேசுநாதருடைய புண்ணியங்களுடனே தேவரீர் கையேற்றுக் கொள்ளக் கிருபை கூர்ந்தருளும். நான் உமது திருக் கற்பனைகளின்படியே சுமுத்திரையாக நடக்கப் பிரதிக்கினை செய்கிறேன்: எனக்கு உமது வரப்பிரசாதத்தையும், திடனையுந்தந்து என்னை ஆசீர்வதித்தருளும்.

பர. பிரி. விசுவா. சொல்லிக்கொள்ள



## விசுவாச முயற்சி.

என் சர்வேசுரா சுவாமி! திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களையெல்லாம் தேவரீர் தாமே அறிவித்தபடியினாலே நானும் உறுதியாக விசுவசிக்கிறேன்.—ஆமென் சேசு.

## நம்பிக்கை முயற்சி.

என் சர்வேசுரா சுவாமி! தேவரீர் வார்த்தைப்பாடு கொடுத்தபடியினாலே சேசுநாதர் சுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தப்பலன்களைப் பார்த்து, என் பாவங்களை எல்லாம் பொறுத்து எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் மோட்ச பாக்கியத்தையுந் தந்தருளுவீர் என்று உறுதியாக நம்பியிருக்கிறேன்.

ஆமென் சேசு.

## தேவசிநேக முயற்சி.

என் சர்வேசுரா சுவாமி, தேவரீர் மட்டில்லாத சிநேகத்துக்குப் பாத்திரமா

யிருக்கிறபடியினாலே எல்லாத்தையும் பார்க்க உம்மை நான் முழுமனதோடே சிநேகிக்கிறேன். பின்னையும் உம்மைப்பற்றி என்னை நான் சிநேகிக்கிறாப்போல மற்ற எல்லாரையுஞ் சிநேகிக்கிறேன்.

ஆமென்சேசு.

## தேவமாதா, காவலான சம்மனசு, உன் பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவர் களை நோக்கி மன்றாடுகிறது.

அர்ச். மரியாயே! சர்வேசுரனுடைய மாதாவே! நீரே எனக்குத் தாய், எனக்குத் தஞ்சம், எனக்கு ஆறுதல் என்னைப் பாதுகாத்தருளும்

சர்வேசுரனால் எனக்கு காவலாக நியமிக்கப்பட்ட சம்மனசானவரே! இந்தினம் என் புத்திக்கு பிரகாசந் தந்து, என்னைப் புண்ணியவழியில் நடத்தியருளும். சர்வேசுரன் சமுகத்தில் நிற்றிருக்கும் சம்மனசுக்களே! அர்ச்சியசிஷ்டவர்களே! எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.



நான் பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவரே! நீர் பூலோகத்திலிருக்கையில் அநுசரித்து வந்த புண்ணியங்களை நானுமநுசரித்து நடக்கும்படியாகவும், உம்மோடு தேவனை பரலோகத்தில் தரிசித்துத் துதிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும்படியாகவும் மன்றாடும்,—ஆமென்சேசு.

## கிருபைதயாபத்து மந்திரம்.

கிருபை தயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க! எங்கள் சீவமே, எங்கள் தஞ்சமே, எங்கள் மதுரமே வாழ்க, பரதேசிகளாயிருக்கிற நாங்கள் ஏவையின் மக்கள், உம்மைப் பார்த்துக் கூப்பிடுகிறோம். இந்தக் கண்ணீர்க் கணவாயிலே நின்று பிரலாபித்தழுது, உம்மையே நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம். ஆகலால், எங்களுக்காக வேண்டி மன்றாடுகிறதாயே! உம்முடைய தயாபமுள்ள திருக்கண்களை எங்கள்பேரிலே திருப்பியருளும். இதன்றியே நாங்கள் இந்தப் பரதேசங் கடந்தபிற்பாடு, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய

சேசுநாதருடைய பிரத்தியட்சமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும், கிருபாகரியே! தயாபரியே! பேரின்ப இரசமுள்ள கன்னிமரியாயே.

சேசுக்கிறிஸ்து நாதருடைய திருவாக்குத்தத்... நாங்கள்... பாத்திரமா...; சர்வேசுர... பரிசுத்த தேவ... எங்களுக்காக வேண்......

பிரார்த்திக்கக் கடவோம்,

சர்வ சத்தியுடையவருமாய் நித்தியருமாய் இருக்கிற சர்வேசுரா! முத்திப்பேறு பெற்ற கன்னித்தாயான மரியாயுடைய ஆத்துமமும் சரீரமும் இஸ்பிரீத்து சாந்துவின் அனுக்கிரகத்தினாலே தேவரீருடைய திருக்குமாரனுக்கு யோக்கியமான பீடமாயிருக்க ஏற்கெனவே நியமித்தருளினீரே! அந்தத் திவ்விய தாயை நினைத்து மகிழ்கின்ற நாங்கள் அவருடைய இரக்கமுள்ள மன்றாட்டினாலே, இம்மையின் சகல பொல்லாப்புகளிலேயும், நித்திய மரணத்திலேயும் நின்று இரட்சிக்கும்படி கிருபை கூர்ந்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்



கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும், ஆமென் சேசு.

---

## தேவ ஸ்துதி.

தேவன் ஸ்துதிக்கப்படுவாராக;

அவருடைய பரிசுத்த நாமம் ஸ்துதிக்கப்படுவதாக!

மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமான சேசுக்கிறிஸ்துநாதர் ஸ்துதிக்கப்படுவாராக!

சேசுவின் திருநாமம் ஸ்துதிக்கப்படுவதாக!

அவருடைய மிக்க அர்ச்சிதமான இருதயம் ஸ்துதிக்கப்படுவதாக!

பீடத்தின் மிகவும் பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்தில் சேசுநாதர் ஸ்துதிக்கப்படுவாராக!

தேவனுடைய தாயாகிய மிக்க பரிசுத்த மரியம்மாள் ஸ்துதிக்கப்படுவாளாக!

அவளுடைய அர்ச்சியசிஷ்ட மாசில்லாத உற்பவம் ஸ்துதிக்கப்படுவதாக.

கன்னிகையும் தாயுமான மரியம்மாளின் நாமம் ஸ்துதிக்கப்படுவதாக.

தமது சம்மனசுக்களிடத்திலும் அர்ச்சிய சிஷ்டவர்களிடத்திலும் தேவன் ஸ்துதிக்கப்படுவாராக.





# இராச் செபம்.

✠ பிதாவுடையவும் சுத......மற்றதும்.

## நன்றியறிந்த தோத்திரம்.

சர்வேசுரா சுவாமி! என்னை ஒன்றுமில்லாதிருக்கையிலே மனுஷனாக உண்டாக்கினீரே;

சுவாமி! உமக்கே தோத்திரம்
உண்டாகக்கடவது.

நான் செய்த பாவங்களினாலே நாகத்துக்குப்போகக் கடன் உண்டாயிற்றே, அந்தக்கடனை என்னால் உத்தரிக்கக்கூடாதென்று தேவரீர் மனுஷனாகப்பிறந்து பாடுபட்டு உத்தரித்தீரே; சுவாமி! உமக்கே........

அந்தப் புண்ணியபலன்களையெல்லாம் ஞானஸ்நான முகாந்திரமாக எனக்குத்தந்தருளினீரே; சுவாமி! உமக்கே.

நான் ஞானஸ்நானம் பெற்றபிற்பாடு அநேகமுறை பாவங்களைச் செய்தேனே அந்தப் பாவங்களையெல்லாம் பாவசங்கீ

ர்த்தனை முகாந்திரமாகப் பொறுத்து என்னை நரகத்திலே தள்ளாமல் மோட்சத்துக்குப் போகிறவழியிலே திருத்திக் கொண்டிருக்கிறீரே; சுவாமி! உம......

நீர் இன்று எனக்கு எண்ணில்லாத உபகாரங்களைச் செய்ததல்லாமல் பிசாசு எனக்கு நினைத்திருந்த அநேக பொல்லாப்புகளையும் விலக்கினீரே; சுவாமி! உமக்கே........

நான் இன்று செய்த பாவங்களையெல்லாம் என் நினைவிலேவரவும் அதுகளுக்காக நான் மெய்யான உத்தம மனஸ்தாபப்படவும் உம்முடைய ஒத்தாசை கட்டளை பண்ணியருளும்.

(ஆத்தும சோதனைசெய்ய:—பத்துக் கற்பனை, திருச்சபைக் கட்டளை, தலையான பாவங்கள் பிரகாரம் ஐந்து நிமிஷம் நினைக்கிறது.) பிறகு உத்தம மனஸ்தாபமந்திரம் சொல்லுகிறது. 56-ம் பக்கம் காண்க.



# ஜெபமாலை.

ஜெபமாலையில் தியானிக்கப்படும் தேவரகசியங்கள் பதினைந்தும் மூன்று பாகமாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை தியானிக்கும்போது நாம் கேட்க வேண்டிய புண்ணியங்களையும் குறித்திருக்கிறோம்:—

(மகனே! பிரதிதினம் ஐம்பத்து மூன்றுமணி செபஞ்செய்ய நேரமில்லாதபோது பத்துமணியாவது ஜெபிக்கும் வழக்கத்தை அநுசரிப்பாயாக).

விசுவாச மந்திரம் சொல்லவும்

பெரிய மணியின்பேரில் பரமண்டல மந்திரமும். சிறு மணிகளின் மூன்றின் பேரில் மூன்று பிரியதத்த மந்திரங்களை சொல்லவும்.

பிறகு பெரியமணியின் பேரில் ஒரு பரமண்டலமந்திரம் சொல்லி தேவ இரகசியத்தை தியானித்துக்கொண்டு 10-பிரியதத்த மந்திரங்களை 10-சிறிய மணிகளின் பேரில் சொல்ல வேண்டும்.





## முதல் சந்தோஷ தேவ இரகசியம்.


1-வது. அர்ச். மரியாயே உமக்கு கா பிரியேல் சம்மனசானவர் மங்கள வார்த்தை சொன்னபோது உமக்குவந்த சந்தோஷத்தைப்பார்த்து எனக்கு தாழ்ச்சி என்கிற புண்ணியத்தைக் கொடுத்தருளும்.

2-வது நீர் எலிசபெத்தம்மாளை சந்தித்ததுபோல நானும் பிறர்சிநேகத்தை அனுசரிக்க கிருபை கூர்ந்தருளும்.

3-வது. அர்ச் மரியாயே இயேசுநாதர் பிறந்தபோது தாரித்திரத்தை அனுசரித்ததினால், நானும் இவ்வுலகப் பற்றுதலையொழிக்கக் கிருபை கூர்ந்தருளும்

4-வது. இயேசுநாதரை தேவாலயத்தில் நீர் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தபோது காட்டின கீழ்ப்படிதலை நான் அனுசரிக்க கிருபை கூர்ந்தருளும்

5-வது. காணாமற்போன இயேசுநாதரை நீர் தேவாலயத்தில் கண்டு மகிழ்ந்ததுபோல சர்வேசுரனுக்கு மாத்திரம் நான் ஊழியஞ்செய்யக் கடவேனாக.





## 2வது துக்க தேவ இரகசியம்.


1-வது. இயேசுவே! நீர் பூங்காவனத்தில் இரத்த வியர்வை வியர்த்து ஜெபித்ததுபோல, நான் சர்வேசுரன் திருச்சித்தத்திற்கு அமைந்து நடக்க கிருபை கூர்ந்தருளும்.

2-வது. இயேசுவே நீர் கற்றூணில் கட்டி அடிபட்டதுபோல நான் சரீர ஒறுத்தலையநுசரிக்க வரந் தந்தருளும்.

3-வது. இயேசுவே, நீர் முண்முடி சூட்டப்பட்டபோது அநுபவித்த வேதனையைப் பார்த்து நான் புண்ணியத்தில் திடன் கொண்டு நடக்க கிருபை கூர்ந்தருளும்.

4-வது. இயேசுவே! நீர் சிலுவையை சுமந்துபோனபோது காட்டிய பொறுமையை நான் பின்பற்றக் கடாட்சித்தருளும்.

5-வது. இயேசுவே! நீர் சிலுவையில் அறையுண்டு மரித்தபோது காட்டிய நன்மாதிரிகையை நான் பின்பற்றி என்னைத் தானே பரித்தியாகஞ் செய்ய வேண்டிய மனத்திடனை எனக்குக் கொடுத்தருளும்.





3வது மகிமை தேவ இரகசியம்.

1-வது. இயேசுவே! நீர் மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததுபோல நானும் பாவத்தைவிட்டு எழுந்து புண்ணியத்தில் வர்த்திக்க கிருபை கூர்ந்தருளும்.

2-வது. இயேசுவே! நீர் மோட்சத்திற்கு ஆரோகணமானதைக் குறித்து என்னில் நம்பிக்கை என்னும் புண்ணியத்தை திடப்படுத்தியருளும்.

3-வது. இஸ்பிரீத்துசாந்து வானவர் அப்போஸ்தலர்மீது இறங்கி வந்தது போல நான் வேகத்தின் மீது பற்றுதல் கொண்டிருக்க வரந் தந்தருளும்.

4-வது. அர்ச். மரியாயே! நீர் மோட்சராச்சியத்திற்கு ஆரோகணமாயினதைப் பார்த்து உமது மக்களாகிய நாங்களும் உம்மிடம் வரமன்றாடும்.

5-வது. தேவமாதாவே! உமக்கு மோட்சத்தில் முடி சூட்டப்பட்டதுபோல நாங்கள் கடைசிவரையில் புண்ணியத்தில் நிலைத்திருக்கும் வரம் அடைந்து தந்தருளும்.

# அர்ச். தேவமாதாவின்

## பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறிஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமி தயையாயிரும்.

கிறிஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறிஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலே யிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,—எங்களைத் தயை செய்து இரட்சியும் சுவாமி.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,—எங்களைத்.........

இஸ்பீரீத்து சாந்துவாகிய சர்வேசுரா,—எங்களைத்.........

அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,—எங்களைத்...



அர்ச்சியசிஷ்ட மரியாயே,—எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,

கன்னியாஸ்திரிகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,

கிறீஸ்துவினுடைய மாதாவே,
தேவ வரப்பிரசாதத்தின் மாதா
மகா பரிசுத்த மாதாவே, [வே;

அத்தியந்த விரக்தியாயிருக்கிற மாதாவே,

பழுதற்ற கன்னியாஸ்திரியாயிருக்கிற மாதாவே,

கன்னிசுத்தங் கெடாத மாதாவே,

மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதாவே,

ஆச்சரியத்துக்குரிய மாதாவே,
நல்ல ஆலோசனை மாதாவே,
சிருஷ்டிகருடைய மாதாவே,

இரட்சகருடைய மாதாவே,
மகா புத்தி உடைத்தான கன்னிகையே,
மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே,
பிரகாசமாய் ஸ்துதிக்கப்பட யோக்கியமாயிருக்கிற கன்னிகையே,
சத்தியுடையவளாயிருக்கிற கன்னிகையே,
தயையுள்ள கன்னிகையே,
விசுவாசியாயிருக்கிறகன்னிகையே,
தருமத்தினுடைய கண்ணாடியே,
ஞானத்துக்கு இருப்பிடமே,
எங்கள் சந்தோஷத்தினுடைய காரணமே,
ஞான பாத்திரமே,
மகிமைக்குரிய பாத்திரமே,
அத்தியந்த பத்தி உடைத்தான பாத்திரமே,



தேவ இரகசியத்தைக் கொண்டிருக்கிற உரோசா என்கிற புஷ்பமே,
தாவீது இராசாவுடைய உப்பரிகையே,
தந்தமயமாயிருக்கிற உப்பரிகையே,
சொர்ணமயமாயிருக்கிற ஆலயமே,
வாக்குத்தத்தத்தின் பெட்டியே,
பரலோகத்தினுடைய வாசலே,
விடியற்காலத்தின் நட்சத்திரமே,
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே,
பாவிகளுக்கு அடைக்கலமே.
கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவே.
கிறிஸ்துவர்களுடைய சகாயமே.
சம்மனசுக்களுடைய இராக்கினியே,
பிதாப்பிதாக்களுடைய இராக்கினியே,

தீர்க்கதரிசிகளுடைய இராக்கினியே,

அப்போஸ்தலர்களுடைய இராக்கினியே,

வேதசாட்சிகளுடைய இராக்கினியே,

ஸ்துதியருடைய இராக்கினியே,

கன்னியாஸ்திரிகளுடைய இராக்கினியே,

சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய இராக்கினியே,

சென்மப்பாவம் இல்லாமல் உற்பவித்த இராக்கினியே,

மகா பரிசுத்த செபமாலையின் இராக்கினியே,

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே;—எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி.



உல. பாவங்.. .(மற்றதும்) எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி.

உக. பாவங்...(மற்றதும்) எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத் தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக,—சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக் கடவோம்.

சுவாமீ! முழு மனதோடே தெண்டனாக விழுந்து கிடக்கிற இந்தக் குடும்பத்தைப்பார்த்து எப்பொழுதும் பரிசுத்த கன்னிகையான முத்திப்பேறு பெற்ற மரியாயுடைய வேண்டுதலினாலே சகல சத்துருக்களின் சற்பனையிலே நின்று பிரசன்

ளராய் தயைசெய்து இரட்சியும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும், ஆமென் சேசு.

---

## சயன ஆராதனை.

சர்வேசுரா சுவாமி! மனுஷர் நித்திரையால் இளைப்பாற இராத்திரிகாலங் கட்டளையிட்டருளினீரே; சுவாமி உமக்கே தோத்திர முண்டாகக்கடவது.

தேவரீர் இந்த இரவில் சடுதிமரணத்திலும் தூர்க்கனவு முதலான பசாசு சோதனைகளாலும் அடியேனுக்கு மோசம்வாராமற்படி காத்தருளும். ஆ! சேசுவே! என் மரணவேளையில் உமது இஷ்டப்பிரசாதத்தோடிருந்து உமது சிலுவையை ஆவலோடு தழுவி உயிர்விடவும், உமது இராச்சியத்தில் உம்மோடு நித்தி



யாய் இளைப்பாறவும் கிருபை கூர்ந்தருளும்.

என் காவலான சம்மனசானவரே! இந்த இராத்திரிகாலத்தில் சகல பொல்லாப்புகளில் நின்று என்னைப் பாதுகாத்தருளும். என்பேர் கொண்ட அர்ச்சியசிஷ்டவரே! சர்வேசுரனிடத்தில் கிருபை கிடைக்கும்படியாக மன்றாடும்.

---

## கடைசி வேண்டுதல்.

அக்கியானங் குறையவும், சத்திய வேதம் பரம்பவும், சத்திய இராசாக்கள் தங்களுக்குள்ளே சமாதானமாயிருக்கவும், பதிதர் துர்மதங்களழியவும், திருச்சபையைவிட்டுப் பிரிந்தவர்கள் திரும்ப அதிற் பிரவேசிக்கவும், அர்ச். பாப்பானவர் நினைத்த தரும காரியங்கள் ஜெயமாகவும், பஞ்சம் படைநோய்கள் நீங்கவும், உத்தரிப்பு ஸ்தலத்தில் வேதனைப்படுகிற ஆத்துமாக்கள் அவதி குறையவும் நாங்கள் ஆராருக்காக வேண்டிக்கொள்

ள வேண்டுமென்று தேவரீர் திருவுளமாயிருக்கிறீரோ, அவர்களெல்லோரு மும து விசேஷ நன்மையைக் கைக்கொள்ளவும், உமது திருக்குமாரன் எங்களுக்காகச் சிந்தின விலைமதியாத திருவிரத்தத்தையும், அவர் திருத்தாயார் அநுபவித்த சொல்லிலடங்காத வியாகுலத்தையும், சிலுவையின் பேறடைந்த ஆர்ச்சிய சிஷ்டவர்களுடைய வேண்டுதலையுங் குறித்து, அடியார்கள் கேட்கிற மன்றாட்டுகளுக்கிரங்கிக் கிருபை செய்தருள வேண்டுமென்று தேவரீரை யிரந்து மன்றாடிக்கொள்ளுகிறோம். ஒரு பர. பிரி.

இடைவிடாமல் ஸ்துதிக்கப்பட யோக்கியமுமாய் மிகுந்தமதுரமுள்ள பூசிதமுமாயிருக்கிற பரம திவ்விய நற்கருணைக்கே அநவரதகாலமும் முடிவாத ஆராதனையும் ஸ்துதியும் தோத்திரமுமுண்டாகக்கடவது. ஜென்மப்பாவமில்லாமல் ஜெனித்து எப்பொழுதும் பரிசுத்த கன்னியாஸ்திரியுமாய், நமதாண்டவளுமாய்க் கொண்டாடப்பட்டவளுமா யிருக்கிற அர்ச். தேவமாதாவினுடைய அம



லோற்பவத்திற்குந் தோத்திரமுண்டாகக்கடவது. சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே! இதோ உமது சரணமாக ஓடி வந்தோம் எங்கள் அவசரங்களிலே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு நீர் பராமுகமா யிராதேயும். ஆசீர்வதிக்கப்பட்டவளுமாய் மோட்சமுடையவளுமாயிருக்கிற நித்திய கன்னிகையே! சகல ஆபத்துக்களிலேநின்று எங்களைத் தற்காத்துக்கொள்ளும்; தேவ வரப்பிரசாதத்தின் தாயே! இரக்கத்திற்கு மாதாவே! அர்ச். மரியாயே! எங்கள் மாற்றானுடைய சோதனையிலேயும் மரணநேரத்திலேயும் உமது திருக்குமாரனை வேண்டி, எங்களைக் காக்கவும்; ஆளவும் கைக்கொண்டு நடத்தவும் வேண்டுமென்று உமது திருப்பாத முத்தஞ்செய்து மன்றாடுகிறோம்.—ஆமென் சேசு.

சேசுமரியே சூசை! உங்களை நம்பினேன், என்னைக் கைவிடாதேயும்.

சேசுமரியே சூசை என் ஆத்துமத்தையும் சரீரத்தையும் உங்கள் அடைக்கலத்தில் ஒப்புக்கொடுக்கிறேன்.

சேசுமரியே சூசை என் கடைசி அவஸ்தையில் எனக்குச் சகாயமாயிரும்.

✠ மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் நித்திய இளைப்பாற்றியை அடையக்கடவதாக, ஆமென் சேசு.

---



கற்பென்கிற புண்ணியத்தைக் காப்பாற்ற மிகவும் அற்புதமான செபம்.

[10-ம் பத்திநாதர் இதற்கு 200 நாட்பலன் அளித்திருக்கிறார்].

தேவமாதாவின் பரிசுத்த அமலோற்பவத்தைக் குறித்து மூன்று பிரியதத்த



மந்திரத்தையும் ஒவ்வொரு பிரியதத்தமந்திரத்துக்குப் பின் ஆர்ச். மரியாயே! உமது பரிசுத்த அமலோற்பவத்தைக் குறித்து அடியேனுக்கு ஆத்தும சரீர பரிசுத்தத்தனத்தையும் கற்பையும் அடைந்தருளும்". என்கிற செபத்தையும் சொல்ல வேண்டியது.

# பொருள் அட்டவணை.

பொருள்: பக்கம்.
அர்ச். சிலுவையந்திரம் ... ... 1
ஆறு இலட்சண மந்திரம் ... ... 5
பரமண்டல மந்திரம் ... ... 10
பிரியதத்த மந்திரம் ... ... 15
விசுவாச மந்திரம் ... ... ... 20
பத்து கற்பனை ... ... ... 34
திருச்சபைக் கட்டளைகள் ... ... 44
தலையான பாவங்கள் ஏழு ... ... 50
தலையான பாவங்களுக்கு விரோதமான புண்ணியங்கள் ஏழு. ... 52
பாவசங்கீர்த்தன மந்திரம் ... ... 53
உத்தம மனஸ்தாப மந்திரம் ... 56
நாம் முழுமனதோடு அரோசித்து விலக்கவேண்டிய பாவங்கள். ... 63
பரலோகமட்டும் அபயமிடும் பாவங்கள். ... ... 64
பிறர் பாவத்தில் விழக்காரணமாயிருக்கும் வழிகள். ... ... ... 65
பாவத்தை விலக்கி நடக்க உதவியான வழி: ... ... 67



பொருள். பக்கம்.
தேவ சம்பந்தமான புண்ணியங்கள் 68
நன்னடத்தைக் கடுத்த புண்ணியங்கள். ... ... 72
புத்திக் கடுத்த புண்ணியங்கள் ... 73
இஸ்-பி. சா. ஞானக் கனிகள் ... 76
சுவிசேஷ மேலான புத்திமதி ... 79
மேலான நற் கிரியைகள் ... ... 80
தேவ திரவிய அனுமானங்கள் ஏழு 81
ஆத்தும சம்பந்தமான புண்ணியங்கள் ... 82
சரீர சம்பந்தமான புண்ணியங்கள் 83
நமது இரட்சகர் மலையின்மீது இருந்தாய் மலர்ந்தருளிய அஷ்ட பாக்கியங்கள். ... ... 86
சின்ன குறிப்பிடம் ... ... 88
ஞானஸ்நானம் கொடுக்கிற வகை 107
பாவசங்கீர்த்தனத்துக்கு வேண்டிய காரியங்கள். ... 108
தேவநற்கருணை [illegible] ... 109
உபவிப் புகழ்தல் ... ... 112
பூசை உதவி மந்திரம் ... ... 116

11959(

| பொருள். | பக்கம். |
|---|---|
| கிறீஸ்துவினுடைய ஒழுக்கத்தைப் பற்றி பொது அநுசரணை. ... | 129 |
| அதிகாலைச் செபம் ... ... | 145 |
| திரிகாலச் செபம் ... ... | 146 |
| கிருபை தயாபத்து மந்திரம். ... | 151 |
| [illegible]வ ஸ்துதி. ... ... | 153 |
| இராச் செபம். ... ... | 155 |
| ஜெபமாலை ... ... | 157 |
| அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனை. | 16[illegible] |
| ச[illegible]னை ஆராதனை. ... ... | 17[illegible] |
| கடைசி வேண்டுதல். ... ... | 17[illegible] |
| கற்பென்கிற புண்ணியத்தைக் காப்பாற்ற மிகவும் அற்புதமான செபம். ... ... | 17[illegible] |